# விடுதலைப்புலிகள்

குரல் - 47 பங்குனி - 1994 அன்பளிப்பு: ரூபா 5/-


# அடுத்த நடவடிக்கை என்ன?

# குழம்பிய நிலையில் சிங்கள அரசு

தென்மாகாணசபைத் தேர்தல் முடிவுகள் - டி. பி. அரசைப் பெருங் குழப்பநிலைக்குள் தள்ளியுள்ளன. டி. பியின் பேரினவாத அரசியலைத் தென்மாகாண வாக்காளர்கள் நிராகரித்துவிட்டதால், அடுத்து என்ன செய்வது என்று தெரியாது, ஐ. தே. கட்சியின் உயர்பீடம் திண்டாடிக்கொண்டிருக்கின்றது.

புலிகளுடனான போரை மேலும் தீவிரமாகத் தொடர்வதற்கான ஒப்புதலைத் தென்மாகாண வாக்காளரிடம் பகிரங்கமாகக் கோரிய ஐ. தே. கட்சியை, அப்பகுதி மக்கள் நிராகரித்துவிட்டனர். நீண்டகாலமாக முடிவில்லாது தொடரும் போரினால் எழுந்த விரக்தியும் - நம்பிக்கையீனமும் ஒருபுறமிருக்க, ஐ. தே. கட்சி மீதான வெறுப்பையும் - கோபத்தையும் தென்மாகாண மக்கள் இத் தேர்தல் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் டி. பி. அரசின் அடுத்த நடவடிக்கை எப்படி அமையப்போகின்றது என்பதே, இன்று மக்கள் எல்லோரதும் பேச்சாக உள்ளது. இத்தேர்தற் தோல்வியைக் கருத்திற்கொண்டு டி. பி. விஜேதுங்கா போரை நிறுத்திப் பிரச்சினையை பேசித்தீர்க்க முனைவாரா அல்லது தொடர்ந்தும் போரை நடாத்திச் செல்வாரா என்பது, இதுவரை தெளிவாகத் தெரியவில்லை.

இத் தேர்தல் முடிவைத் தொடர்ந்து போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும் என்ற கருத்து, சிறீலங்காவில் பலமடையத் தொடங்கியுள்ளது. இந்தக் கருத்தை எதிர்க்கட்சிக் கூட்டணி தனது அரசியற் கோசமாக எடுத்துக்கொண்டுள்ளது. இதேவேளை, புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க முடியாது என்பதை ஏற்றுக்கொண்டுள்ள உலக நாடுகளும் போரை நிறுத்தி, பேச்சுமூலம் தீர்வுகாணும்படி விஜேதுங்கா அரசை வற்புறுத்துகின்றன.

தேர்தல் முடிவுகளும் வெளிநாட்டு அழுத்தங்களும் ஒருபுறமிருக்க, சிங்களப் பேரினவாத சக்திகளும் - இராணுவத் தலைமையும் - ஆளும் வர்க்கத்தன் ஒருபகுதியும் தொடர்ந்தும் போர் அரசியலையே விரும்புகின்றன. இதுவரை நாளும் வெளிப்படுத்திவந்த பச்சை இனவாதப் பேச்சுக்களையும், ''இனப்பிரச்சினை இல்லை'' என்பனபோன்ற மூடத்தனமான ஆவேசப் பேச்சுக்களையும் பிழை என்று ஒப்புக்கொண்டு கீழிறங்கிவர, டி. பியின் அரசு தயாரா என்ற கேள்வியும் எழுகின்றது.

ஆனால் போரைத் தொடர்ந்து நடாத்துவது என்பது அரசுக்கு எளிதான விடயமல்ல. போர்க்களத்தில் இன்னும் பாரிய தோல்விகளைச் சிங்களப் படைகள் சந்திக்குமாயின், அது டி. பி. யின் அரசியல் வாழ்வை மட்டுமல்ல ஐ. தே. கட்சியின் எதிர்காலத்தையே குழிதோண்டிப் புதைத்துவிடும் என்பதே உண்மை. எனவே இத்தகைய ஒரு விசப்பரீட்சையில் இறங்க அரசு தயாரா?

இவ்விதம், போரைத் தொடர்வதா அல்லது சமாதான முயற்சிகளில் இறங்குவதா என்று முடிவெடுக்க முடியாது. டி. பியின் அரசு குழம்பிய நிலையிலேயே உள்ளது! ○

## விடுதலைப்புலிகள் இதழுக்கு வயது பத்து

## உள்ளே


- சமாதான முயற்சிகள்: சிறீலங்காவின் பதில் என்ன?
- ஈழத்தமிழர் போராட்டமும் இந்தியாவின் நிலைப்பாடும்
- தமிழர்களைக் கவர சந்திரிகா முயற்சி.
- தமிழீழப் பெண்கள்: பிரகாசமான எதிர்காலம்
- தென்றலாக வீசிய புயல் லெப். கேணல் நரேஸ்
- தென் தமிழீழம்: ஒரு சிறைப்பட்ட வாழ்வு.
- விடுதலைப் புலிகளை ஆதரிக்க வேண்டியது நமது கடமை.
- மண் போதும்
- பூபதி என்ற பொன் மகள்




தேசத்தின் ஒரு மூதாட்டியுடன் தேசியத் தலைவர்

"சமாதான வழிமூலம் எமது மக்களுக்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்."


தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு

இந்தியப் படைகள் தமிழீழத்தை விட்டு வெளியேறி இந்த மாதத்துடன் நான்கு வருடங்கள் முடிந்துவிட்டன. 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி, கடைசி இந்தியச் சிப்பாயும் திருக்கோணமலைத் துறைமுகத்திலிருந்து கப்பலேறியிருந்தான்.

1987 ஆம் ஆண்டு யூலை 29 ஆம் திகதி, இந்திய - சிங்கள அரசுகளுக்கிடையில் கைச்சாத்தாகிய இந்திய – சிறீலங்கா ஒப்பந்தமும், இவ் ஒப்பந்தத்தின்படி தமிழீழ மக்களின் அனுமதியில்லாமல் இந்தியப் படைகள் தமிழீழம வந்தடைந்ததும், அதன் பின் நடந்த இந்திய – புலிகள் போரும், இந்திய அரசுக்கும புலிகள் இயக்கத்திற்கும் இடையிலான அரசியல் – இராஜீக உறவுகளைத் துண்டித்திருந்தன.

இந்த உறவுச் சிதைவுக்கு மூலகாரணமான இந்திய – சிறீலங்கா ஒப்பந்தத்தின் பிரதான சூத்திரதாரியாக திரு. டிக்சிற் இருந்தார் என்பது, அனைவரும் அறிந்த பழைய செய்தி.

திரு. டிக்சிற்றின் மிரட்டல் இராஜதந்திரமும், அவரது தூரநோக்கற்ற-உணர்ச்சிபூர்வமான அரசியல் பார்வையும், முற்றுமுழுதாக இந்திய நலனிலேயே அவர் குறியாக இருந்தமையும் இறுதியில் ஒரு பெரும் போரையே உருவாக்கிவிட்டது. இதில் 8000 இற்கும் மேற்பட்ட தமிழீழக் குடிமக்கள் பலியாகினர். அத்துடன் என்றுமே திரும்பப்பெறமுடியாத அரும் பொருட்களைத தமிழீழம் இழந்துவிட்டது. இந்திய அரசும் தனது படையில் 1000 இற்கும் மேற்பட்டவர்களை இழந்ததுடன், தனது கீர்த்தியையும் புலிகளிடம் பறி கொடுத்துவிட்டு நாடு திரும்பியது.

தமிழீழத்தில் இந்தியா சந்தித்த அந்த அரசியல் – இராணுவத் தோல்விகளுக்குப் பிரதான காரணம், தமிழீழத்தின அரசியல் யதார்த்தத்தை அது கருத்தில் எடுக்காமையும், புலிகள் இயக்கத்தை அது பொருட்படுத்தாமையும் ஆகும். இந்தத் தவறுகளை இந்தியா இழைப்பதற்கு கணிசமான அளவில் பங்குவகித்த டிக்சிற் அவர்கள், இப்போது–சுமார் ஏழு ஆண்டுகளின் பின் – தமிழீழத்தின் அரசியல் யதார்த்தத்தை ஓரளவுக்காவது புரிந்து கொண்டவராகக் காணப்படுகின்றார். அண்மையில் டிக்சிற் அவர்கள் 'இந்து' பத்திரிகையில் எழுதிய கட்டுரையொன்றில், ஈழத்தமிழர் தொடர்பான அவரது புதிய பார்வையைக் காணக்கூடியதாக இருந்தது. ஈழத்தமிழர் அரசியலின் மைய சக்தியாகப் புலிகள் இயக்கம் இருப்பதையும், மக்கள் தலைவனாக தலைவர் பிரபாகரன் விளங்குவதையும், அந்தக் கட்டுரையில் திரு. டிக்சிற் ஏற்றுக்கொண்டு எழுதியுள்ளார்

விடுதலைப் புலிகள் தமிழீழம்

Liberation Tigers Of TAMIL EELAM

# புலிகளின் குரல்

## ஈழத்தமிழர் போராட்டமும் இந்தியாவின் நிலைப்பாடும்

இந்திய இராஜதந்திர சேவையிலிருந்து இப்போது டிக்சிற் அவர்கள் ஓய்வுபெற்றுவிட்டாலும்கூட–அவர் கூறிய கருத்துக்களை இந்திய அரசின் உத்தியோக பூர்வ கருத்துக்களாக எடுத்துக்கொள்ள முடியாது என்றாலும்கூட–திரு. டிக்சிற்றின் கூற்றுக்கள் கூர்ந்து நோக்கப்பட வேண்டியவையாகும். அதுவும் இந்திய – சிறீலங்கா ஒப்பந்தம் உருவாவதில் பிரதான பங்குவகித்த 'இந்து' பத்திரிகையில் டிக்சிற்றின் கருத்து வெளியாகியிருப்பது, அதன் முக்கியத்துவத்தை மேலும் அர்த்தமுள்ள தாக்கியுள்ளது. ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டம் தொடர்பான இந்தக்கருத்துமாற்றம் இந்திய இராஜதந்திர வட்டாரத்துக்குள்ளும் பேசப்படுமானால் அது, சிதைந்துபோயுள்ள இந்திய – புலிகள் உறவைச் சீராக்க உதவும் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனாலும், ஈழத்தமிழரின் அரசியல் பிரச்சினைகள் சிறீலங்காவின் ஒற்றை ஆட்சிக்குள்தான் தீர்த்து வைக்கப்பட வேண்டும் என்றும், அதுதான் இந்திய தேசிய நலனுக்கு உகந்தது என்றும் கூறி, இந்தப் புதிய பார்வைக்கு டிக்சிற் அவர்கள் ஒரு குறுகிய எல்லையையும் விதித்துவிட்டார்.

ஈழத்தமிழர்களின் தன்னாட்சி உரிமைப் போரும், போராட்டத்தின் இறுதி வெற்றியும, இந்திய நலனுக்கு - இந்திய ஒருமைப்பாட்டுக்கு - குந்தகமாக அமைந்து விடும என்ற இந்தியாவின் நீண்டகால அச்சம்தான், இவ்விதமான ஒரு அரசியல் நிலைப்பாட்டை எடுக்க இந்தியக் கொள்கை வகுப்பாளர்களைத் தூண்டி வருகின்றது.

பாகிஸ்தானிலிருந்து பங்களாதேஷ் பிரிந்துசெல்ல முயன்றபோதும், இதே கருத்தைச் சில இந்தியத் தேசியவாதிகள் உரத்துக் கூறியிருந்தனர். பங்களாதேசின் பிரிவினை, இந்திய மாநிலங்களில் ஒன்றான மேற்குவங்காளத்திலும் பிரிவினைப் புயலை வீசச்செய்துவிடும் என்று, அவர்கள் வாதிட்டனர். இறுதியில், இந்தியாவின் நேரடி உதவியினால் பங்களாதேஷ் தனிநாடாகியது. அந்தப் புதிய தேசத்தின் உதயம் மேற்கு வங்கத்தை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை என்பது வரலாறு.

பங்களாதேஷ் மக்களைப் போன்றே தமிழீழ மக்களும ஒரு இன அழிப்பிலிருந்து தங்களைத்தற்காத்துக்கொள்வதற்காகவே, ஒரு தனி அரசை நிறுவப் போராடி வருகின்றார்களே அல்லாமல், தென்னாசியப் பிராந்தியத்தில் பிரிவினைகளை ஊக்குவிக்கவேண்டும் என்றநோக்கத்துடன் அல்ல என்பதை, இந்தியக் கொள்கை வகுப்பாளர்கள் கவனத்தில் எடுக்கவேண்டும்.

தமிழரின் தன்னாட்சி உரிமைப் போராட்டம் இந்தியத் தேசியநலனுக்கு விரோதமானது என்ற அச்சம் உண்மையில் மிகைப்படுத்தப்பட்டதென்பதுடன், நகைப்பிற்கிடமானதொன்றுமாகும். தேவையற்றஇந்த அச்சங்களையும் ஐயங்களையும்ஒதுக்கிவைத்துவிட்டு, ஈழத்தமிழரின் தன்னாட்சி உரிமையை இந்திய அரசு அங்கீகரிக்க வேண்டும் என்பதே, ஈழத் தமிழர்களின் பேரவாவாகும். ○

# "விடுதலைப் புலிகளை ஆதரிக்கவேண்டியது நமது கடமை"

– பேராசிரியர் சாலை இளந்திரையன்

தமிழீழ விடுதலைப் போர் தி.மு. கழகத்தார் ஆட்சிக்கு வந்த பிறகு தொடங்கியது அல்ல; சிலபேர் நினைத்துக்கொண்டு இருப்பது போல, தி.மு. கழக அரசை நம்பி ஈழத்தமிழர்கள் தங்கள் விடுதலைப் போராட்டத்தை நடத்தவும் இல்லை. தமிழீழ விடுதலைப் போராட்டம், பல்வேறு காலகட்டங்களையும் வெவ்வேறு நடைமுறைகளையும் கொண்டதாக, மாறிமாறி நடந்து வந்திருக்கிறது. இலங்கைக்கு அரசியல் விடுதலை (சுதந்திரம்) கிடைத்த 1948 முதலே, சிங்களவர்கள் தமிழர்களின் உரிமையைப் பறிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுவிட்டார்கள்; அதற்கு எதிரான ஈழத்தமிழர் கிளர்ச்சியும் வேகம்கொண்டுவிட்டது. இந்த வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட கட்டம்தான் (1983 இல்), சிங்களப் பேரினவாதக் கொடுமைக்கு எதிரான தமிழர்களின் கருவிப் போராட்டமாக வடிவெடுத்தது.

தமிழீழப் போராட்டம் எடுத்த போர்க்கள வடிவத்தைப்பற்றிச் சிலருக்குக் கருத்து வேற்றுமை இருக்கக்கூடுமாயினும், அவர்களின் உரிமைப் போரைக் கட்டாயமாக்கிய சிங்களப் பேரினவாதக் கொடுமைகளை, யாரும் மறக்கவோ மறுக்கவோ முடியாது. அரச பயங்கரவாதம், சிங்களவர்களின் இன ஒடுக்கல், வெறி என்பவைகளின் காரணமாக உருவான ஈழத்துத் தமிழர்களின் தனித்தமிழீழக் கோரிக்கையையும், யாரும் தவறு என்று சொல்ல முடியாது. இந்த அடிப்படையிலேதான், தமிழகத்தை மாறிமாறி ஆண்டு வந்திருக்கிற திராவிடக் கட்சிக்காரர்கள் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை ஆதரித்து வந்திருக்கிறார்கள். இன்றைக்கு அவர்களில் சிலபேர் அந்தப் போராட்டத்தை ஆதரிப்பவர்களாகவும், வேறு சில பேர் ஆதரிக்காதவர்களாகவும் நடந்துகொள்வதற்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் எந்த வகையிலும் காரணமாக மாட்டார்கள். அவர்கள், தாங்கள் தொடுத்த விடுதலைப் போரை, யாரையும் எதிர்பாராமலே தொடர்ந்து நடத்திக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் உரிமைப் போராட்டத்தில் உள்ள நியாயத்திற்கு அப்பால்–தமிழகத் தமிழ் மக்கள் அந்தப் போராட்டத்துக்கு ஆதரவு தருவதற்கு, வேறு காரணங்களும் உள்ளன. முதலாவதாக, தமிழீழ விடுதலைப் போரில் ஈடுபட்டிருக்கிறவர்கள் தமிழகத்துத் தமிழர்களின் இனத்தைச் சேர்ந்த தமிழர்கள். அவர்களுக்கு ஒரு இக்கட்டு என்றால் - இந்தத் தமிழர்களின் குருதி கொதிக்கும்; கொதிக்க வேண்டும்! பெரிய பெரிய, புதிய புதிய அரசியல் வார்த்தைகளைப் போட்டு, இந்த நியாயமான உணர்ச்சிகளுக்கு யாரும் அணைகட்டிட முடியாது. இந்த உண்மையைப் புரிந்துகொள்ளாமல், தமிழகத் தமிழ் மக்களின் ஈழத்தமிழர் ஆதரவுக் குரலை நெரிக்க முனைகிறவர்கள் யாரானாலும், அவர்கள் தோற்றுப்போவார்கள்!

அடுத்தபடியாக - ஒரு பெரிய செயல் நடைபெறும்போது அதன் துணை விளைவுகளாகச் சில பொருள்கள் இயல்பாகவே கிடைப்பது வழக்கம். அதே போல, ஈழத்தமிழர்கள் தங்கள் உரிமையைப் பாதுகாத்துக்கொள்வதற்காக உருவாக்கிய போராட்டம், தமிழ் இனத்திற்கே ஒட்டுமொத்தமான சில நலன்களைத் தந்திருக்கிறது. பெரிய தலைவர்கள் எது சொன்னாலும் எது செய்தாலும் கோயில் மாடுகள்போல்

(7 ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப் புலிகள்

# இதழுக்கு வயது பத்து

# நடு வீட்டுக்குள் விழுகின்ற இடிகள்

## படையினருக்கு எரிச்சலையும் தலையிடியையும் கொடுக்கும் தொடர் அதிரடி

பூநகரி 'தவளை' இராணுவ நடவடிக்கைக்குப் பின்னர் சிங்களப் படைத்தளபதிகளுக்கு எரிச்சலையும் - தலைவலியையும் ஒரு தொடர்தாக்குதல் கொடுத்துள்ளது.

இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்குள் இருக்கும் மன்னார்த்தீவு மற்றும் ஊர்காவற்துறை ஆகிய இடங்களில் - ஒருவாரத்தில்-அடுத்தடுத்து நடந்த மூன்று தாக்குதல்களே அவையாகும்.

இத் தொடர்தாக்குதலில் 13 படையினர் கொல்லப்பட்டுள்ளனர்; 15 பேருக்கு மேல் படுகாயமடைந்தனர். ஆனாலும் இத்தாக்குதல்களில் படையினருக்கு ஏற்பட்ட இழப்புகளைவிட, வெற்றிகரமாக உட்புகுந்து தாக்குதல்களை நிகழ்த்திவிட்டு வெற்றிகரமாக புலிகள் வெளியேறிச் சென்றமைதான், படைத்தளபதிகளுக்கு எரிச்சலையும் தலைவலியையும் கொடுத்துள்ளன.

மன்னார்த் தீவில் தாராபுரம் இராணுவ - பொலிஸ் கூட்டு மினி முகாம் மீது, 9-3-94 அன்று ஒரு அதிரடித்தாக்குதல் நடாத்தப்பட்டது. இதில் 6 படையினர் பலியாகினர்; பலர் காயமடைந்திருந்தனர். இத்தாக்குதல் நடந்த இரண்டாம் நாள், ஊர்காவற்துறையில் ஒரு இராணுவ வண்டியை இலக்குவைத்து நடாத்தப்பட்ட 'கிளைமோர்' தாக்குதலில், 4 படையினர் உயிரிழந்தனர்; 12இற்கும் மேற்பட்டோர்காயமடைந்திருந்தனர். இந்த 'கிளைமோர்' தாக்குதல் நடந்த நான்காம் நாள் மீண்டும் மன்னார்த் தீவினுள் நடந்த ஒரு அதிரடியில், மூன்று பொலிசார் கொல்லப்பட்டனர்; பலர் காயமடைந்தனர். இந்த மூன்று துணிகரத் தாக்குதல்களும் கடல்வழியாக வந்த புலிவீரர்களால் நடாத்தப்பட்டதாக, படையினர் தரப்பில் கூறியிருந்தனர்.

இதேவேளை இராணுவத்தின் பிடியிலுள்ள காரைநகர், எழுவைதீவு, அனலைதீவு, நயினாதீவு, மண்டைதீவு, ஊர்காவற்துறை மற்றும் மன்னார்த் தீவுகளில் நிலைகொண்டுள்ள படையினர்க்குத் தொல்லைகொடுக்கும் நோக்குடன் புலிகள் ஒரு தொடர்தாக்குதலை நடாத்தத் திட்டமிட்டுள்ளனர் என, 'ஐலண்ட்' இதழ் (13.3.94) கூறியிருந்தது.

நடந்து முடிந்த தாக்குதல்கள் காரணமாகவும், இனியும் தாக்குதல்கள் நடக்கலாம் என்ற ஊகங்கள் காரணமாகவும், மன்னார்த்தீவு உட்பட தீவகம் தொடர்பான இராணுவக் கொள்கையில் சில மாற்றங்கள் செய்தாகவேண்டுமென, படைத் தளபதிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இப்பகுதியில் படையினரின் எண்ணிக்கையை மேலும் அதிகரித்து, தீவகத்தை இரும்புப் பிடிக்குள் வைத்திருக்க வேண்டுமென, ஒருபகுதியினர் கூறியுள்ளனர். அவ்விதம் துருப்புகளைத் தீவகத்தில் குவிப்பது நடைமுறையில் பல சிக்கல்களைக் கொடுக்கக்கூடியது என வாதிடும் மறுபகுதியினர், கட்டுப்பாட்டுப் பகுதியைச் சுருக்கிக்கொள்வதன்மூலம் அப்பகுதியைப் பலப்படுத்தி இராணுவத்தினரைப் பாதுகாக்கவும், புலிகளின் ஊடுருவலைத் தடுக்கவும் முடியுமெனக் கூறுகின்றனர். ஆனால் இதுவரை பெரியளவில் எந்த மாற்றமும் நடக்கவில்லை என்றே, கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

மன்னார்த் தீவில் அடுத்தடுத்து நடந்த இரண்டு அதிரடிகளிலும் பார்க்க, ஊர்காவற்துறை கிளைமோர் கண்ணி படையினரை அதிகளவு அச்சத்தில் ஆழ்த்தியுள்ளது இதற்கு ஒரு காரணம் உண்டு. பத்தொன்பது மாதங்களுக்கு முன் சிங்கள தேசத்தையே உலுக்கியெடுத்த அராலிக் கண்ணியுடன், இந்தக் கிளைமோர் கண்ணியைப் படையினர் ஒப்பிட்டுப் பார்ப்பதால் எழுந்த அச்சம்தான் அது.

படையினரின் பிடியிலுள்ள தீவகத்தில், அன்றிலிருந்து இன்றுவரை பாதுகாப்பான பிரயாணப்பாதை என்று எதுவுமில்லை என்ற உணர்வு, இப்போது படையினரை ஆட்கொண்டுவிட்டது. இந்த மனப்பீதி அங்குள்ள படையினரது மனநிலையை, பெருமளவு பாதிப்பதுடன், ஒரு மனக்களைப்பையும் ஏற்படுத்தலாம்.

அண்மைக்காலத்தில் கடற்புலிகள் பெற்றிருக்கும் பலமும் இந்தத் தொடர்தாக்குதல்களும், கடலால் சூழப்பட்டிருக்கும் தீவகப்பகுதிப் படையினரது 'அமைதியை' நிரந்தரமாகவே குலைத்துவிட்டிருக்கும் என நம்பலாம். ○

விடுதலைப்புலிகள்

# இதழுக்கு வயது பத்து

1984 ஆம் ஆண்டு மார்ச் மாதம், புலிகள் இயக்கத்தின் அதிகாரபூர்வ ஏடான விடுதலைப் புலிகள் முதலாவது இதழ் (குரல் - 1) வெளியிடப்பட்டிருந்தது. அன்றிலிருந்து இந்தியப் படைகள் தமிழீழம் வரும்வரை, 12 இதழ்கள் வெளிவந்திருந்தன. இப் பதின்மூன்று இதழ்களும் தமிழ்நாட்டில் அச்சிடப்பட்டு, தமிழ்நாட்டிலும் - தமிழீழத்திலும் விநியோகிக்கப்பட்டன.

இந்தியப் படையுடனான போர் நடைபெற்றுக்கொண்டிருந்த சுமார் மூன்று வருடங்களும் பத்திரிகை வெளிவரவில்லை.

இந்தியப் படைகள் தமிழீழத்தை விட்டு வெளியேற்றப்பட்ட பின் மீண்டும் 1990 மாசி மாதம், 'விடுதலைப் புலிகள்' இதழ் வெளிவரத் தொடங்கியது. 1994 மார்ச் மாதம்வரையுள்ள இந்த நான்கு வருட காலத்திலும் மொத்தம் 35 இதழ்கள் வெளிவந்துவிட்டன. இந்தவகையில் இந்த இதழுடன் மொத்தம் 47 இதழ்கள் வெளிவந்து, 'விடுதலைப்புலிகள்' ஏடு தனது பத்தாவது வயதில் காலடிவைத்துள்ளது.

இந்தியாவிலிருந்து 'விடுதலைப் புலிகள்' வெளிவந்த காலங்களில், ஏறக்குறைய 50,000 பிரதிகள் அச்சடிக்கப்பட்டு விற்பனையாகி வந்தது. தமிழ்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் அமோகமாக விற்பனையாகிவந்த 'விடுதலைப் புலிகள்' கணிசமான அளவில் தமிழீழத்திலும் விநியோகிக்கப்பட்டது.

இந்தியப் படைகள் வெளியேறிய பின் இருந்த சமாதான சூழலில் யாழ்ப்பாணத்தில் பத்திரிகை அச்சிடப்பட்டபோது, அதன் மொத்த விற்பனை 30.000 பிரதிகளாக இருந்தது. இக்காலத்தில் தமிழீழத்தின் அனைத்துப்பகுதி மக்களுக்கும் கிடைக்கும்படி பத்திரிகை விநியோகிக்கப்பட்டது.

1990 யூன் போர் தொடங்கும்வரை, மூன்று இதழ்களையே இவ்வாறு வெளியிட முடிந்தது.

போர் தொடங்கியவுடன் தென்தமிழீழத்திற்கான விநியோகம் நின்றுபோய்விட்டது. அதன்பின் தீவிரமான முறையில் நடந்த குடாநாட்டு முற்றுகைப் போரால், வன்னி மற்றும் மன்னார்ப் பெருநிலப்பரப்பில் நடந்த பத்திரிகை விநியோகம் பெரிதும் சீர்குலைந்திருந்தது அந்தக் காலப்பகுதியில் 10,000 முதல்12,000 பிரதிகள் வரையிலேயே பத்திரிகையின் விற்பனை இருந்தது ஆனால் இது படிப்படியாக அதிகரித்து இப்போது. 18 000 முதல் 20,000 பிரதிகள் வரையில் விற்பனை உயர்ந்துவிட்டது.

விரிவான முறையில் புலிகளின் போர் நடவடிக்கைகள் பற்றியும், புலிகள் இயக்கத்தின் அரசியல் நிலைப்பாடு மற்றும் கொள்கை விளக்கங்கள் உட்பட போராட்ட இலக்கியத்தின் புதிய வீச்சையும் தாங்கியவாறு. 'விடுதலைப் புலிகள்' இதழ் அழகுற வெளிவந்துகொண்டிருக்கிறது.

எமது விடுதலை இயக்கத்தினதும் தமிழீழ தேசியத்தினதும் அரசியல் குரலாக ஒலித்துக்கொண்டிருக்கும் 'விடுதலைப் புலிகள்' ஏடு, தனது பத்தாவது வயதை எட்டிவிட்ட இந்த மகிழ்ச்சியான சேதியை,தமிழீழ மக்களுடன் பகிர்ந்துகொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்

- ஆசிரியர் குழு ○

விடுதலைப்புலிகள் இதழுக்கு வயது பத்து

# டி.பி.தூர எறிந்த தூண்டிலை சுதந்திரக்கட்சி தூக்கிவிட்டது

**புதிய உத்திகளுடன் தமிழ் வாக்குகளுக்கு சந்திரிகா வைக்கும் கண்ணி**

இந்த வருடத்தின் பிற்பகுதியில் நடைபெற இருக்கும் சிறீலங்காவுக்கான ஜனாதிபதித் தேர்தலில், தனது வெற்றிக்குத் தமிழர்களின் வாக்குகள் தேவையில்லை என்ற நிலைப்பாட்டுடன், தற்போதைய ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா உள்ளார்.

சிங்களவர் - தமிழர் என்ற இரண்டு தோணிகளில் கால் வைத்து ஒன்றுமில்லாமல் சறுக்கி விழுவதைவிட, பலமான தோணியினுள்ளே (சிங்களவர்) ஆழக் கால்பதித்தால் போதும் என்ற சித்தாந்தத்துடனேயே 'டி. பி.' உள்ளார்.

இந்தப் பேரினவாதக் கண்ணோட்டம் தேசிய அளவில் டி. பிக்கு எவ்வளவு தூரம் வெற்றியைத் தேடிக்கொடுக்கும் என்பதை தென்மாகாணசபைத் தேர்தல் முடிவைமட்டும் வைத்து தீர்ப்புக் கூறிவிட முடியாது.

தற்போது சிறீலங்காவில் நடைமுறையில் இருக்கும் ஜனாதிபதித் தேர்தல் முறையின்படி, தமிழ் - முஸ்லிம் வாக்குகள் அதிலும் குறிப்பாக தமிழ் வாக்குகள்தான் தேர்தல் முடிவைத் தீர்மானிக்கும் நிர்ணய சக்தியாக இருக்கின்றன என்பது ஒரு உண்மை. இப்பேருண்மையை முன்னாள் ஜனாதிபதி திரு. பிரேமதாசா நன்குணர்ந்ததால்தான், இனப்பிரச்சினையில் அவர் இரட்டை வேடம் பூண்டு, சிங்கள வாக்குகளையும் கவர்ந்து தமிழ் வாக்குகளையும் தன்பக்கம் வரச்செய்வதில், கணிசமான வெற்றியைக் கண்டார்.

இதேவேளை டி. பி. விஜேதுங்காவை ஒத்த பேரினவாத நிலைப்பாட்டுடன் இதுவரை காலமும் செயற்பட்டுவந்த சுதந்திரக் கட்சி இப்போது, தனது அரசியல் கூடத்தில் சில காட்சி மாற்றங்களைச் செய்துள்ளது: அதுதான் தமிழ் வாக்குகளைக் கவர முயலும் தந்திரோபாயம் ஆகும்.

இந்தத் தந்திரோபாய வாக்கு வேட்டையை, சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பாளர் என்று கருதப்படும் திருமதி சந்திரிகா குமாரணதுங்கா கச்சிதமாகச் செய்துகொண்டிருக்கின்றார்.

போரை நிறுத்திப் பிரச்சினையைத் தீர்க்க தன்னிடம் மட்டுமே தீர்வுத் திட்டம் உள்ளது என்று கூறும் அவர், கொழும்பு மற்றும் மலையகத் தமிழர்களைக் கவரும் சில முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளார்.

கொழும்பில் தமிழர்களுக்கெதிரான நடவடிக்கைகளைச் சாடைமாடையாகக் கண்டிக்கும் அவர், தான் முதலமைச்சராக உள்ள மேல் மாகாணத்தில் இருக்கும் சில தமிழ்ப் பாடசாலைகளுக்குச் சென்று, மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் அந்நியோன்யமாகக் கதைத்து - சில குறைபாடுகளை நீக்குவதாக உறுதியளித்து - தமிழரின் வாக்குகளுக்குக் 'கண்ணி' வைக்கின்றார்.

**டி. பி. நிராகரித்த தமிழரின் வாக்குகள் அவரது கட்சியின் அரசியல் எதிரிகளான சுதந்திரக் கட்சியினருக்கு இலாபத்தைக் கொடுத்துவிடாது பார்ப்பதில், ஐ. தே. கட்சியின் சில மூளைகள் துரிதமாகச் சிந்தித்தபடியும் உள்ளன.**

ஆனால், இந்தக் 'குழப்பமான அரசியலை' செய்ய டி. பியின் 'நேர்மையான பேரினவாத மூளை' அனுமதிக்கவில்லை. எனவே, நேரடியாக இனவாதம் பேசி, தான் சிங்கள மக்களின் பிரதிநிதி மட்டும்தான் என்பதை வெளிப்படையாகச் சொல்லிவருகின்றார்.

டி. பி. நிராகரித்த தமிழரின் வாக்குகள் அவரது கட்சியின் அரசியல் எதிரிகளான சுதந்திரக் கட்சியினர்க்கு இலாபத்தைக் கொடுத்துவிடாது பார்ப்பதில், ஐ. தே. கட்சியின் சில மூளைகள் துரிதமாகச் சிந்தித்தபடியும் உள்ளன.




**சிங்களவர் - தமிழர் என்ற இரண்டு தோணிகளில் கால்வைத்து ஒன்றுமில்லாமல் சறுக்கி விழுவதைவிட, பலமான தோணியினுள்ளே (சிங்கள) ஆழக் கால்பதித்தால் போதும் என்ற சித்தாந்தத்துடனேயே 'டி. பி.' உள்ளார்.**

அந்தச் சிந்தனையில் ஒன்றுதான், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் ஜனாதிபதி முறையை இல்லாதொழித்து, நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் முறைமை பற்றி, டி. பி. பேசிய ஒரு பொதுக்கூட்டப் பேச்சு ஆகும். டி. பியின் சொல்லைப் போல ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படும் முறையும் இருக்குமானால், அது டி. பிக்குச் சாதகமானதாகவே இருக்கும் என்பது பரவலான எதிர்பார்ப்பு.

ஏனெனில் நாடளாவியரீதியில் நடைபெறும் ஜனாதிபதித் தேர்தலின்போது தமிழ் - முஸ்லிம் மக்களது வாக்குகள் வெற்றியைத் தீர்மானிக்கும் நிர்ணய சக்திகளாக இருப்பதைப்போல, நாடாளுமன்றத் தேர்தல்களின்போது தமிழ் - முஸ்லிம் வாக்குகள் ஒரு பெரிய நிர்ணய சக்தியாக இருக்கமாட்டா. தமிழ் - முஸ்லிம் வாக்குகள் தொகுதிரீதியாகச் சிதறுண்டு கிடப்பதுதான் அதற்குக் காரணம்.

ஆனால், ஜனாதிபதி தேர்ந்தெடுக்கப்படவேண்டிய புதிய முறை பற்றிய டி. பியின் கருத்து, இந்த வருட இறுதியில் நடைபெறப்போகும் ஜனாதிபதித் தேர்தலின் போது நடைமுறைக்கு வருமா என்பது, கேள்விக்குரியதே.

எது எப்படியிருந்தபொழுதிலும், இதுவரைநாளும் ஐ. தே. கட்சிக்கே பெருமளவில் சென்ற சிறீலங்காவாழ் தமிழர்களது வாக்குகளுக்கு, திருமதி சந்திரிகா தலைமையில் இயங்கப்போகும் சுதந்திரக்கட்சி தூண்டில் போட்டுக்கொண்டிருக்கின்றது என்பது, ஒரு உண்மை.

இந்த வாக்குத் தூண்டிலைத் தூர எறிந்தவர் வெல்வாரா அல்லது அதைத் தூக்கியெடுத்துப் பயன்படுத்த முயல்பவர் வெல்வாரா என்பதை, பொறுத்திருந்து பார்ப்போம். ○

**விடுதலைப்புலிகள் இதழக்கு வயது பத்து**

# தமிழீழப் பெண்கள்

## புலிகளின் தலைமைத்துவத்தில் பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி

தேசிய விடுதலைப் போராட்டத்தில் தமிழீழப் பெண்களது நேரடிப் பங்கை - போர்க்களங்களில் அவர்களது வீரத்தை - போர்த்திறனை வியந்து போற்றாதோர் இல்லை. அந்தளவுக்கு, போராட்டத்தில் தமிழீழ இளம் பெண்களது பங்கும் பணியும் மிக முக்கியம் பெறுகின்றது இதன் நேரடி விளைவாக தமிழினத்தின் படைபலம் உயர்ந்து செல்வதைக் கூறலாம்.

அதேவேளை - மறைமுகமாக - தமிழீழப் பெண்களது வாழ்நிலையும் - பெண்கள் தொடர்பாக எமது சமூகத்தின் பண்பாட்டுப் பார்வையும் வளர்ச்சியை நோக்கிய மாற்றங்களுக்கு உட்படத் தொடங்கிவிட்டது என்பதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

'' நள்ளிரவு 12 மணிக்கு பெண் ஒருத்தி தனியாக வீதியில் செல்லும் நிலை எப்போது ஏற்படுகின்றதோ அப்போதுதான், உண்மையான சுதந்திரம் கிடைத்த நாளாகக் கருதமுடியும்'' என, மகாத்மா காந்தி ஒரு தடவை கூறியிருந்தார். இவ்வாறான சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் மட்டுமே நிலவுகின்றது என, அண்மையில் யாழ்ப்பாணம் சென்றுவந்த தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் கூறியதாக 'வீரகேசரி' வெளியிட்டுள்ள செய்தி, மேலே கூறப்பட்டதை நிரூபிப்பதாகவே உள்ளது.

இவ்வருட உலக மகளிர் நாள் வடபுலத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்று 'பி.பி.சி.' அறிவித்தமையும், இச் செய்தியின் முக்கியத்துவத்தைக் கோடி காட்டுவதாகவே உள்ளது.

ஒரு பத்து வருடங்களுக்கு முன் பெண்களை எமது சமூகம் பார்த்த முறைமைக்கும், இப்போது பார்க்கும் முறைக்கும் பெரிய வித்தியாசம் உண்டு.

தலைமைத்துவப் பண்போ, சவால்களுக்கு முகங்கொடுத்து முன்னேறும் உடல் - உளத்திறனோ, நிருவாகப் புலமையோ, அறிவாற்றலோ அற்றவள் என்பதே பெண்கள் தொடர்பான முன்னைய மதிப்பீடு ஆகும். ஆனால் இன்று, போராட்ட அரசியலின் அனைத்துக் கட்டுமானங்களிலும் பெண்கள் முக்கிய பங்கெடுத்துள்ளதுடன், ஆண்களுக்கு நிகராக அனைத்துத் துறைகளிலும் திறமைகாட்டி வருகின்றனர் என்பது வெளிப்படை. இந்தவகையில் பெண்கள் தற்போது வகிக்கும் சமூகப் பாத்திரம், பெண்மை தொடர்பான 'சமூக மனதில்' பாரிய மாற்றங்களை ஏற்படுத்த வல்லது என்பது குறிப்பிடத்தக்கது.

நீதிவழங்கும் நீதியாளர்களாக, நியாயங்களை எடுத்துரைக்கும் சட்டவாளர்களாக, சட்டம் - ஒழுங்கு பேணலில் பெரும் பங்காற்றும் காவல்துறைப் பணிமனைகளின் பொறுப்பாளர்களாக மற்றும் எழுத்துத் துறை, கலைத் துறை, நிருவாகத் துறைகள் என்று பெண்களது சமூகப் பொறுப்புகள் இப்போது அதிகரித்துள்ளன.

இவ்வாறாக அரசியல் நிருவாகங்களில் - தேசிய விடுதலைப் போராட்டத்தில் - பெண்களது பங்கும் பணியும் அதிகரித்து வந்த பொழுதிலும், குடும்ப வாழ்விலும் பெண்ணியம் தொடர்பான விழிப்புணர்ச்சியிலும் மற்றும் சில பண்பாட்டுவழக்கங்களிலும்பெண்பெரிய மாற்றங்களைச் சாதித்துவிட்டாள் என்று கூற முடியாது. புனிதமான திருமண உறவின் ஆரம்பத்திலேயே 'சீதனம்' என்ற பெயரில் பெண்ணின் கௌரவம் - ஆளுமை - சிறுமைப்படுத்தப்பட்டு, பெண் விலை பேசப்படும் அறிவீனத்தை இதற்கு ஒரு உதாரணமாகக் காட்டலாம். இந்த சமூக அநீதியிலிருந்து பெண்கள் மீண்டுவருமுகமாக, சீதனம் தொடர்பான ஒரு சட்டப் பாதுகாப்பைப் பெண்கள் விரைவில் அனுபவிக்க இருக்கின்றனர். இது தொடர்பான ஒரு சட்டவரைவை இயற்றி, சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தப் பாடுபடும்படி அரசியல் துறையினரையும், மகளிர் அணியினரையும் நீதிநிர்வாகத் துறையினரையும் தலைவர் பிரபாகரன் அவர்கள் பணித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க, தென்தமிழீழத்தில் தமிழ்ப் பெண்களது வாழ்க்கை கொடுமை நிறைந்ததாக உள்ளது. கேட்போர் மனம் திடுக்கிடும் வகையில் சிங்களப் படைகள் புரியும் மிலேச்சத்தனங்களால் தமிழ்ப் பெண்கள் அல்லலுறுகின்றனர்.

கொலைகள் -பாலியல் வன்முறைகள் - பாலியல் தொந்தரவுகள் ஒருபுறமிருக்க, சிங்களப் படைகள் திட்டமிட்டரீதியில் கணவன்மார்களைக் கொன்று பெண்களைவிதவைகளாக்குவதும், தந்தைமாரைக் கொன்று பெண்பிள்ளைகளை அநாதைகளாக்குவதும் தொடர்ந்தபடியேயுள்ளது. அன்புக்குரியவர்களை - ஆதரவான துணைகளை- இழந்து சோகத்தில் மிதப்பதுடன் இராணுவ அடக்குமுறைகள் மிலேச்சத்தனங்களுக்கு ஆளாவதுடன், தாங்கமுடியாத பொருளாதாரச் சுமைகளுடனும் குடும்பப் பொறுப்புக்களுடனும் தென்தமிழீழப் பெண்கள் அவதியுறுகின்றனர். இப்பெருந்துயர்களுக்கு மத்தியிலும் அவர்கள் வெளிப்படுத்தும் தேசாபிமானமும் உறுதியும் பிரமிக்கத்தக்கன. உண்மையில் இது தமிழீழப் பெண்கள் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் என்பது உறுதி.

உலகளாவிய ரீதியில் பெண்களது வாழ்நிலையை மேம்படுத்தும் முயற்சிகள் எந்தளவுக்கு வெற்றி பெற்றிருக்கின்றன என்பதை உறுதியாகக் கூறமுடியாவிட்டாலும், தமிழீழத்தைப் பொறுத்தவரை ஈழப்பெண்களது எதிர்காலம் பிரகாசமானதாகவே இருக்கின்றது. இதற்குப் பிரதான காரணம் புலிகள் இயக்கத்தின் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தேசிய விடுதலைப் போராட்டம்தான்! தேசிய விடுதலையுடன் சமூக விடுதலையையம் வென்றெடுக்க வேண்டும் என்ற உயரிய இலட்சியத்துடன் போராட்டத்தை வழிநடத்தும் தலைவர் பிரபாகரனது செயல்பாடுகள்தான், இவ்விதம் சமூக மாற்றத்திற்கான கதவுகளைத் திறக்கச் செய்துள்ளது.

''பெண் ஒடுக்குமுறை என்பது ஒரு சிக்கலான சமூகப் பிரச்சினை. நீண்ட நெடுங்காலமாக, எமது பண்பாட்டு வாழ்வில் ஆழப் புரையோடி நிற்கும் சமூகக் கொடுமை. இந்தச் சமூக அநீதியை வேரோடு பிடுங்கி எறிய எமது இயக்கம் உறுதி பூண்டு நிற்கிறது இந்த இலட்சியத்தை நாம் வெற்றிகரமாகச் சாதித்து முடிப்பதாயின் பெண்களின ஆதரவும் பங்களிப்பும் அவசியம். தமிழீழப் பெண்ணினம் எமது விடுதலை இயக்கத்துடன் அணிசேர்ந்து இந்தப் புரட்சியை முன்னெடுக்க முன்வரவேண்டும்.''

இவ்வாறு தலைவர் பிரபாகரன் அவர்கள், இவ்வாண்டு மகளிர்நாளின் போது விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**வடக்கில்,...**

''தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கையும் போராட்டச் சூழ்நிலையும் வடபகுதி தமிழ்ச் சமூக அமைப்பில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி இருக்கின்றன. 'நள்ளிரவு 12 மணிக்கு பெண் ஒருத்தி தனியாக வீதியால் செல்லும்நிலை எப்போது ஏற்படுகின்றதோ அப்போதுதான், உண்மையான சுதந்திரம் கிடைத்த நாளாகக் கருத முடியும்' என, மகாத்மா காந்தி ஒருதடவை கூறியிருந்தார். இவ்வாறான சூழ்நிலை யாழ்ப்பாணத்தில் மட்டுமே நிலவுகின்றது'' என, அண்மையில் யாழ். சென்றுவந்த தொண்டர் நிறுவனம் ஒன்றின் பிரதிநிதி ஒருவர் கூறியிருந்தார்.

வீரகேசரி 7. 3. 94

**நீதிவழங்கும் நீதியாளர்களாக, நியாயங்களை எடுத்துரைக்கும் சட்டவாளர்களாக, சட்டம்–ஒழுங்கு பேணலில் பெரும் பங்காற்றும் காவல்துறை பணிமனைகளின் பொறுப்பாளர்களாக மற்றும் எழுத்துத்துறை, கலைத்துறை, நிரூவாகத் துறைகள் என்று பெண்களது சமூகப் பொறுப்புகள் இப்போது அதிகரித்துள்ளன.**

## தளபதி கிட்டு நினைவாக இரு நூல்கள்

இந்தியச் சதிக்குள் சிக்கி, சகதோழர்கள் ஒன்பது பேருடன் வங்கக்கடலிலே காவியமான கேணல் கிட்டுவினது ஒருவருட நினைவு நாளையொட்டி, இரண்டு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. என் இனியவளுக்கு என்ற பெயரில் ஒரு நூலும், தளபதி கிட்டு: ஒரு காலத்தின் பதிவு என்ற பெயரில் மற்றைய நூலும் வெளிவந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவினால் இவ்விரு நூல்களும் வெளியிடப்பட்டுள்ளன.

### என் இனியவளுக்கு

உலகநாடுகள் பலவற்றிலும் இருந்தபடி, யாழ்ப்பாணத்தில் இருக்கும் தனது துணைவியாருக்கு கேணல் கிட்டு அவர்கள் எழுதிய கடிதங்களின் தொகுப்பாக, இந்நூல் அமைந்துள்ளது. சிறியதும் பெரியதுமாக இருபத்தைந்து மடல்கள் இந்நூலிலுள்ளன.

போராட்டவாழ்வின் இன்பதுன்பங்கள்பற்றி, அறத்தை அடிப்படையாகக் கொண்ட தனிமனித வாழ்வுமுறைபற்றி, அரசியல் விழிப்புணர்வுபற்றி



தனது மனதில் உதித்தவற்றைத் தனது துணைவியாருக்கு தளபதி கிட்டு கடிதங்களாக வரைந்துள்ளார். இந்நூலுக்கு அவரது துணைவியார்முன்னுரை எழுதியுள்ளார். தளபதி கிட்டுவுடனான தனது முதல் சந்திப்பையும், அச்சந்திப்பு சங்கிலிபோலத் தொடர்ந்து திருமணஉறவுவரை வளர்ந்ததையும், பின்னர் வெளிநாடுகளில் இருந்தபடி கடிதமூலம் அவர் வெளிப்படுத்திய தாயகப் பற்றையும் திருமதி ஆன் சிந்தியா கிருஷ்ணகுமார் (கிட்டு) தனது முன்னுரையில் நினைவு கூர்ந்துள்ளார்.

அழகான அட்டை அமைப்புடனும், தெளிவான அச்சுப் பதிப்புடனும் இந்நூல் வெளிவந்துள்ளது. நூலொன்றின் விலை50ரூபா. ([illegible]ஆம் பக்கம் பார்க்க)

விடுதலைப்புலிகள் இதழுக்கு வயது பத்து

## லெப். கேணல் நரேஸ் - நாயகன்

# தென்றலாக வீசிய புயல்

பூநகரிச் சமர்தான் புலிகள் இயக்கத்தின் பலத்தையும், அதன் போரிடும் சக்தியையும் எடுத்தியம்பியது. ஆனாலும், 'புலிகளுக்கே உரித்தான சண்டை' என்று, புலிகளின் போர்த்திறனைப்பறைசாற்றிய சண்டையென்று புலோப்பளைச் சமரைத்தான் செரல்லவேண்டும்.

பட்டப் பகற்பொழுதில், கவசங்களற்ற வெட்ட வெளிப் பிரதேசத்தில், மணலோடு மணலாகி மறைந்திருந்த புலிகள், கவசங்களுடனும், கனரக ஆயுதங்களுடனும் நகர்ந்த எதிரிகளுக்கு முன்னால், ஆக்ரோசமாக எழுந்தபோது, உலகையே வியப்பிலாழ்த்திய அந்தச் சண்டை வெடித்தது.

டாங்கிகளும், பீரங்கிகளும், நவீன போர்க் கலங்களும் மனஉறுதிக்கு முன்னால் மண்டியிட்டன. சாவுக்கு அஞ்சாத துணிவுக்கு முன்னால், பகைவனின் படை துவம்சமாகிப் போனது. நுட்ப தந்திரோபாயமான போர் வியூகத்திற்குள் சிக்கி, சிங்களச் சேனை சிதைந்தழிந்தது. டாங்கிகளும், கவச வண்டிகளும் நொருங்கின. 'எக்கச்சக்கமான' ஆயுதங்களை எதிரி பறிகொடுத்தான்.

வரலாறு காணாத படுதோல்வியைப் பரிசளித்து, புறப்பட்ட இடத்திற்கே பகைவனைத் திருப்பியனுப்பி வைத்தனர் புலிகள்.

யாழ். குடாநாட்டின் உயிருக்கு உயிர் கொடுத்த, யாழ்ப்பாண மக்களின் வாழ்வுக்கு வாழ்வளித்த அந்தச் சண்டைக் களத்தில்தான் வன்னி நிலத்தின் போர் மறவன், எங்கள் நரேஸ் வீழ்ந்தான்.

புலோப்பளையில் - பெருவெற்றியைப் பெற்றுத்தந்த, ஒரு சண்டை முனையை வழிநடாத்திக்கொண்டிருந்தபோது நரேசுக்கு முன்னால் விழுந்த எதிரியின் பீரங்கிக் குண்டொன்று அந்த வீரத்தளபதியை எங்களிடமிருந்து பிரித்துக்கொண்டது.

அவனோடு கூட இன்னும் 85 தோழர்கள், அந்த வெற்றிக்கு விறகானார்கள்.

அப்போது அவனுக்குப் பதினாறு வயது. புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயத்தில் படித்துக்கொண்டிருக்கும்போது - பத்தாம் வகுப்பைப் பாதியில் நிறுத்திவிட்டு, தாய்நாட்டிற்காக அவன் துப்பாக்கியைத் தூக்கினான்.

எட்டு வருடங்களுக்கு முன்னர் - ஒரு மாலைப் பொழுது மங்கிக்கொண்டிருந்தது. காலையிலேயே வந்துவிட்டதால், பொறுமையை அடக்க முடியாமல் அவன் காத்துக்கொண்டிருந்தான். "எப்படியாவது போய்விட வேண்டும்." கூட்டிச்செல்பவரைக் காணவேயில்லை. புதுக்குடியிருப்பில் ஒதுக்குப் புறமாக இருக்கும் அந்த வீடுதான், புலிகள் இயக்கத்தின்தொடர்பு இடம்.

திடீரென படலையடியில் கேட்ட சத்தத்தில் "அவர்தானா ...?" என ஆவலோடு எட்டிப்பார்த்தவன் அதிர்ந்து போனான். வந்துகொண்டிருந்தது இவனது அண்ணன். தன்னைக் கூட்டிச் செல்லத்தான் அவர் வருகின்றார் என்பதை ஊகிக்க அவனுக்கு நேரமெடுக்கவில்லை. இலேசாகப் பயம் பிடித்துக் கொண்டது. ஆனாலும், மனதுக்குள் பொருமினான். "தாங்களும் போகமாட்டினம். போற ஆட்களையும் விடமாட்டினம்." அப்படியே சொல்லித் திருப்பி அனுப்பிவிடவேண்டும்; நினைத்துக் கொண்டான். ஆனால், விசியம் தலைகரணமாக நடந்தபோது, அவனால் நம்பமுடியவில்லை. வந்த அண்ணனும், வீட்டின் ஒரு மூலையில் போய்க் குந்திக்கொண்டார். கண்கள் சந்தித்தபோது, ஆளையாள் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டார்கள். யாராவது ஒரு ஆள் வீட்டுக்குத் திரும்பியே ஆகவேண்டும் என்றது இயக்கம். "நீ சின்னப் பையன்தானே, வயசு வரட்டும்" என்று நரேசைத்தான் வீட்டுக்குப் போகச் சொன்னான் அண்ணன். தம்பி மறுத்துவிட்டான்; அடியோடு மறுத்துவிட்டான். "வீட்டுக்கு ஆள் வேணுமெண்டால் நீயே போ" என்று அண்ணனுக்குச் சொன்னான். அண்ணனும் மறுத்துவிட்டான் இருவருமே பிடிவாதமாக இருந்தார்கள். முடிவெடுக்க முடியாத சிக்கலில் முகாம் பொறுப்பாளர் மாட்டிக் கொண்டார்.

கடைசியில், வன்னியின் 'ஜீவன்' பயிற்சி முகாமின் முதலாவது அணியில், அண்ணனும் தம்பியும் ஒன்றாகவேதான் பயிற்சி எடுத்து, முடித்து வெளியேறினார்கள்.

நரேசின் போராட்ட வாழ்வு இப்படித்தான் ஆரம்பித்தது.

துடிதுடிப்பாகத் துள்ளித்திரிந்த அந்தப் பொடியனை ஊரில் எல்லோரும் 'குரு' என்றுதான் செல்லமாகக் கூப்பிடுவார்கள். 07.11.1969 அன்று, சிங்கராஜா - மேரிகமலின் தம்பதிகளின் இரண்டாவது குழந்தையாக அவன் கண் திறந்தபோது, பெற்றவரும், பேரர்களும், சுற்றவரும் சேர்ந்து வைத்த 'அருள்நாயகம்' என்ற பெயர், பள்ளிக்கூடப் பதிவுக்குமட்டுமே செல்லுபடியானது. அந்தச் சின்னவன் குறும்புத்தனம் அதிகமானவனாக இருந்தபோதும், பசுமையாகப் பழகும் பண்பும், இலகுவில் இரக்கப்பட்டுவிடும் சுபாவமும், கோபம் வந்தால் கூட எவரையும் அளவுக்கதிகமாகக் கோபித்துக் கொள்ளாத இயல்பும் அவனிடம் குடிகொண்டிருந்தன. கதைகளுக்கு அவ்வளவு இடம் கொடுக்காது, காரியங்களில் மட்டும் கண்ணான ஒரு குணாம்சமும், எதனையும் துருவித்துருவி ஆராய்ந்து விடயங்களை அறிய விழையும் ஆர்வமும் அவனிலிருந்த சிறப்பான தன்மைகள். எடுத்துக்கொண்ட எந்த முயற்சியையும், நிறைவெய்தும்வரை நிறுத்திக்கொள்ளாத உழைப்பாளி அவன். பிஞ்சுப் பருவத்திலேயே அறிவும், ஆற்றலும் அவனுக்குள் விதைபோட்டு வளரத் துவங்கியிருந்தன. அவனுக்குள் ஊறிப்புரையோடியிருந்த இத்தகைய உயர்ந்த தன்மைகள்தான் - படிப்படியாகப் பரிணமித்து- பிற்காலத்தில், சண்டைக் களங்களின் அதிபதியாகச் செயற்படக்கூடிய தகமைக்கும் - நிர்வாகப் பொறுப்பாளனாகப் பணியாற்றக்கூடிய தகுதிக்கும் அவனை வளர்த்துச் சென்றன என்று சொல்லலாம்.



இந்திய ஆக்கிரமிப்புப் பூதம் எங்கள் நிலமகள் மேனியில் கோரத் தாண்டவமாடிய ஆரம்ப நாட்களில் ஒன்று அது. புதுக்குடியிருப்பில், சிற்றூர்ப் பொறுப்பாளனாக, நரேஸ் அப்போது அரசியல் வேலை செய்துகொண்டிருந்தான். அடிக்கடி மேலால் பறந்து இலக்கற்றுச் சுட்டுக்கொண்டு திரிந்த இந்திய வல்லூறு ஒன்று, அன்றும் வந்து சுட்டுக்கொண்டுபோனது. இலக்கு வைத்துச் சுட்டதோ, இலக்கின்றித்தான் சுட்டுவிட்டுப் போனதோ தெரியவில்லை. ஆனால், அதன் ரவைச் சன்னங்கள், நரேசின் நாரியையும் உடைத்து, இடது காலையும் துளைத்துச் சென்றுவிட்டன. அருகிலேதான் வீடு. யாரோ ஓடிச்சென்று சொல்லிவிட பெற்றெடுத்த தாய் மனது ஓலமிட்டது. ஓடோடிவந்த அன்னை, ஊறிப்போகாமல் நிலத்தில் தேங்கிநின்ற குருதியில் விழுந்து, விம்மி வெடித்துக் கதறிக் கொண்டிருக்க, வைத்தியசாலைக் கட்டிலில் - தனது காயத்துக்குக் கட்டுப்போடுவதை அமைதியாகப் பார்த்துக்கொண்டிருந்தான் மைந்தன்.

காயம்மாறி வந்தவன் கண்ணிவெடிக்கு இலக்குத் தேடினான், வைக்கக்கூடிய இடத்தையும் தேடினான். வசதியான இடம் அவனது சொந்த வீட்டிற்கு அருகில்தான் இருந்தது.

வேவு பார்த்து, நேரம் குறித்து, படை வண்டித் தொடரில் இத்தனையாவதுக்கு என இலக்கு வைத்து, கண்ணிவெடி புதைத்து, வயரிழுத்து, பற்றைக்குள் பதுங்கி அவன் அமைத்தக் காத்திருந்தபோது - காட்டிக் கொடுப்பவன் காரியம் பார்த்துவிட்டான். அந்த "நல்ல வேலையை" செய்தவன் நரேசின் வீட்டையும், குடும்பத்தையும் சேர்த்தே காட்டிக்கொடுத்தான்.

இந்தியர்கள் வளைத்துப் பாய்ந்தார்கள். அந்த விடுதலைப் புலி தப்பிவிட்டான். அம்மாவும் பிள்ளைகளும்கூடத் தப்பிவிட்டார்கள். ஆனால், அப்பா சிக்கிக்கொண்டு விட்டார்

அவரது கையாலேயே தீமூட்ட வைத்து, அனல் வாய்கள் அவர்களது குடிசையைத் தின்று தீர்த்துச் சாம்பராக்கும் அக்கிரமத்தைக் கண்களாலும் காணவேண்டிய கொடுமைக்கு அப்பாவை உள்ளாக்கிய இந்தியர்கள், அவரை இழுத்துக் கொண்டு போனார்கள். அன்று கொண்டு போனவர்கள்தான் - அதன் பிறகு அப்பா வரவில்லை; இன்றுவரை... வரவேயில்லை.

அப்பா இனி வரவே மாட்டார் என்பது தெரிந்தபோது, அம்மா துவண்டு போனாள்.

அப்பாவைப் பறிகொடுத்த சோகம், பெரும் சுமையாய் அம்மாவை அழுத்திக் கொண்டது. அப்பா உயிரிழந்ததோடு, அம்மா உயிரிருந்தும் இல்லாதது போலாகிவிட்டாள். கொஞ்சக் காலத்திற்கு முன்னர்தான் ஆசைத்தங்கை கனிஸ்ராவை இயற்கையிடம் இழந்து போயிருந்தது அந்தக் குடும்பம். இது அடுத்த இடி. இந்த வேதனையின் தொடர் இத்தோடு முடிந்ததா? இல்லையே! அம்மாவின் ஆத்மாவைப் பிழிந்த கொடுந்துயர் நீளத்தானே செய்தது; இதன் பிறகு. அவள் பாசத்தைக் கொட்டி வளர்த்த குழந்தைகள் இருவரை அம்மா அடுத்தடுத்து இழந்த துன்பம் நிகழ்ந்தது! ஊர்து நாயகத்தையும், மரிஸ்ரலாவையும் கொடிய நோய்கள் பிடித்துக் கொண்டு போனபோது அம்மாவை நடைப்பிணமாக்கிய அந்தச் சோகத்தை! அம்மாவின் மனநிலைக்கு உருக்கொடுக்க வார்த்தைகள் கிடையா.

இந்தியப்படையின் இடைவிடாத நெருக்கடி; அம்மாவுக்கும், தம்பி தங்கைக்கும் ஆறுதல் சொல்லித் தேற்றிவிட்டு, நரேஸ் தலைமறைவாகி விட்டான்.

இந்தியாவை எதிர்த்துப் புலிகள் நிகழ்த்திய அந்த ஆச்சரியகரமான வரலாற்றுப் போரில் - அதன் பிறகு அவனது பணி அடர்ந்த காடுகளுக்குள் தொடர்ந்தது. "சூரிய ஒளி உட்புகாத வனங்களில் புலிகளைத் தேடுகிறோம்" என இந்தியர்கள் வர்ணித்த இடங்களிலெல்லாம், அவன் இந்தியர்களைத் தேடினான். எதிரிகளுக்காகக் காத்துக் கிடந்தான். அவர்களது அசைவுகளையெல்லாம் வேவு பார்த்தான். கேட்டுக் கேள்வியின்றிப் புகுந்தவர்களுக்குப் புலிகள் புதைகுழி தோண்டிய சண்டைகளில் அவனது துப்பாக்கி இலக்குத் தவறாமல் இயங்கியது.

குமுழமுனையில் ஒரு சண்டை இதே இடத்தில் வைத்து எங்கள் வீரர்கள் மீது இந்தியர்கள் பதுங்கியிருந்து தாக்கியதற்குப் பதிலடியாக அது நடாத்தப்பட்டது. அன்று, வீழ்ந்துபோன எங்கள் தோழன் ஒருவனின் தலையை இந்தியர்கள் அறுத்தெடுத்துப் போய்விட்டார்கள். 'அவர்களுடைய பாணியிலேயே அவர்களுக்குப் பதிலளிப்பேன்" என்று சொல்லிச் சென்ற நரேஸ், சொன்னதைச் செய்தான்.

போர் புரிவதன் நவீன வழிமுறைகள் பற்றி, பிரபாகரனின் படைகளிடம் பாடம் கற்றுக்கொண்டு, இந்திய வல்லாதிக்கத்தின் பட்டாளங்கள் வெளியேறிய பின் - மீண்டும் போரோசை அதிர, 'இரண்டாவது ஈழ யுத்தம்' ஆரம்பித்தபோது, வன்னியின் சண்டைமுனைகளில் ஒரு முன்னணிச் சண்டைக்காரனாக நரேஸ் முழங்கத்துவங்கினான்.

இராணுவத்தினரைத் தாக்கி முகாம்களுக்குள் முடக்கிய புலிகள், படிப்படியாக முகாம்களைத் தாக்கி அழிக்கத் துவங்கியபோது - போர் புதிய பரிமாணத்தைப் பெற்றது.

கொக்காவில் படை முகாமை நிர்மூலமாக்கியபோது, ரவைகள், நரேசின் இடதுகாலில் துளையிட்டன. மாங்குளம் முகாமைத் தகர்த்தழித்த கடைசித் தாக்குதலின் போது, காயம், இடது கையில் பட்டது. முல்லைத்தீவு முகாம் முற்றுகைக்குள், முடக்கப்பட்டவர்களுக்கு முண்டு கொடுக்க, கடல்வழியாகத் தரையிறங்கி வந்தவர்களை எதிர்கொண்ட சண்டையில், இயந்திரத் துப்பாக்கியின் சன்னங்கள் இடுப்பை உடைத்துச் சென்றன.

விடுதலைப்புலிகள் இதழுக்கு வயது பத்து

இப்படியிருக்கையில் - 1991 இன் முடிவுப் பகுதியில் - அது ஒரு துயர நாள். படையினரின் பதுங்கித் தாக்குதலொன்றில் எமது முல்லைத்தீவு மாவட்டச் சிறப்புத்தளபதி மேஜர் காந்தனை நாங்கள் இழந்துபோனோம். அதன் பிறகு, அவனின் இடத்திற்கு, ஆற்றலும், ஆளுமையும்கொண்ட, நரேஸ், தளபதி பால்ராஜின் பரிந்துரையின்பேரால் நியமிக்கப்பட்டான்.

மக்களின் குடிசைகளுக்குள்ளேதான் அந்த விடுதலைப் புலி குடியிருந்தான். அவர்களின்மேல் அளவுகடந்த பாசத்தைப்பொழிந்து நின்று, அவர்களது இன்பங்களிலும், துன்பங்களிலும் பங்காளியானான். முகாமில் கூடியிருக்கும்போது, ''அந்த ஊர்ச்சனங்கள் சரியாக் கஷ்டப்படுதுகள்'' என எங்களுக்குள் கதைத்துக்கொள்வது அவனது காதில் விழுந்துதானால் - அடுத்த நாள், கையிலுள்ளவற்றை எல்லாம் கொண்டுபோய் வைத்துக்கொண்டு அந்தக் கிராமத்தில் நரேஸ் நிற்பான். மக்களது குறைகளை நிவர்த்திசெய்ய, தன்னால் இயலுமானவரைக்கும் வழிசெய்து கொடுத்தான். மக்களை அணிதிரட்டித் துணைப் படையை உருவாக்கி, போர் அரங்குகளில் மெச்சத்தக்கவிதமாகச் சேவையாற்றவைத்தான். எதிரி நகரக்கூடும் என அரவம் தெரிந்த இடங்களிலெல்லாம், அந்தத் தளபதி ஊன் உறக்கமின்றிக் கிடந்தான். ஒவ்வொரு துப்பாக்கிக்கும் 'நிலை' காட்டினான். அல்லும் பகலும் ஓய்வின்றி நின்று, அரண்களுக்கு அமைவிடம் சொன்னான்.

அந்த நாட்களில் - லெப்ரினன்ற் கேணல் நவநீதனின் உற்ற துணையோடு அவன் செய்து முடித்த பணிகள் ஏராளமானவை.

அன்றொருநாள். வற்றாப்பளை அம்மன் கோவிலில் கொடியேறி திருவிழா ஆரம்பித்திருந்தது. சிங்களப் படையிடம் அனுமதி வாங்கி, செஞ்சிலுவைச் சங்கத்திடம் அனுசரணை பெற்று, வன்னி நில மக்கள் கோலாகலமாகக் கொண்டாடிய அந்தப் பெருவிழா மீது, சிங்கள வெறியர்கள் பீரங்கிக் குண்டுபொழிந்து நாசப்படுத்திய கொடூரம் நடந்தது. செய்தியறிந்தபோது நரேஸ் கொதித்தான். அந்தத் துயரம் அவனது இதயத்தில் அம்புகளாய்த் தைத்தது. ''பதிலடி கொடுத்தே தீருவேன்.'' அந்த மணித்துளியிலேயே சொல்லிவைத்தான். காயமடைந்தவர்களுக்கு உதவவென அவன் அனுப்பி வைத்த வாகனங்கள், கோவிலை நோக்கி விரைந்து கொண்டிருக்க, முல்லைத்தீவு முகாமின் கரையோரக் காவல் வியூகத்தை வேவுபார்க்க ஆட்களை ஒழுங்கு செய்துகொண்டிருந்தான் அந்தத் தளபதி.

இருள் விலகாத ஒரு அதிகாலையில் அந்தப் பதிலடித் தாக்குதல் நடந்தது. முன்னணி வீரர்களுள் ஒருவனாக நரேஸ் களத்திலிறங்கினான். பகைவனுக்கு அடி பிடரியில் விழுந்த, அதிசயமான தாக்குதல் அது. எப்படி அது சாத்தியமானது என்பதை, இன்றுவரை எதிரியால் ஊகிக்கமுடியவில்லை 25 சிங்களப் படையாட்களைக் கொன்று, 'பிப்ரிகலிப'ரோடு ஆயுதங்களையும் எடுத்துவந்த அந்தத் தாக்குதலில் இழப்பேதுமில்லைப் புலிகளுக்கு. ' புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் சிங்களப் படை அகலக்கால் வைத்தால், அது மிக ஆபத்தாகவே முடியும் என்பதையே இத்தாக்குதல் உணர்த்துகிறது'' என்று சொன்னது பி. பி. சி.

முல்லைத்தீவு பழைய இராணுவ முகாமுக்கு அருகிலிருந்த மினி முகாமைத் தாக்கி, 9 படையினரின் உடல்களையும், ஆயுதங்களையும் எடுத்து வந்த சண்டை, கடற்கரையோர ரோந்து அணியொன்றைத் தாக்கி 6 படையினரைக் கொன்று ஆயுதங்களைக் கைப்பற்றிய சண்டை, முல்லைத்தீவிலிருந்து அலம்பில் நோக்கி நகர்ந்த படையினரை எதிர்கொண்டு, ஓய்வு உறக்கமின்றி பதினொரு நாட்கள் மோதிய தொடர்ச் சண்டை என, அந்த வீரனின் சாதனை வரிசை நீளமானது.

இப்போது, கிளிநொச்சிக்கோட்டச் சிறப்புத் தளபதியாகப் பணி. எவருக்குத் தெரியும் இது தான் நாங்கள் அவனோடு வாழப்போகும் கடைசி வருடம் என்று? அந்த மக்களின் உயர்வுக்காக, அந்தப் பிரதேசத்தின் மேம்பாட்டிற்காக அவனது நாட்கள் உரமாகின. ஏற்கெனவே பட்ட வெடிகளினால் இயற்கையமைப்பு மாறிப் போன இடது காலுடன், ஆனையிறவுப் படைத் தளத்தின் தென்பகுதி அரண்களைச் சுற்றிச் சுற்றி நடந்து தாக்குதலுக்கு வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்த பொழுதுகளிலும் - சமூக மேம்பாட்டுப் பணிகளில் நேரமொதுக்கி ஈடுபட்டான். துவக்கப்பட்ட வேலைத்திட்டங்களுக்குத் தடங்கல்கள் வந்தபோது, நீக்கி நிவர்த்திசெய்தான். உதவிகேட்டு வந்தவர்கள் கைநீட்டி, நின்றபோது, கைகொடுத்தான். ''செய்து தருவேன்'' எனக் கொடுத்த வாக்குறுதிகளை, தலைமேல் வைத்து செய்து முடித்தான். ஒவ்வொரு கிராமத்துக்குள்ளும், அந்தத் தளபதி, மக்களின் குறை துடைக்க நடந்தான். பாடசாலைக்குச் செல்லாத பள்ளிச் சிறுவர்களுக்கு, படிப்பின் முக்கியத்துவத்தைப் பரிவோடு எடுத்துரைத்தான். குப்பையாகத் திரிந்த பையன்களைக் கூப்பிட்டு அணைத்து, துப்புரவைப்பற்றிச் சொல்லிக்கொடுத்தான். நகம்வெட்டி, தலைக்கு எண்ணை தேய்த்து, சுத்தமாய் இருக்கச்சொல்லி அனுப்பிவைத்தான்.

காஞ்சிபுரம் கிராமத்தில், இராணுவத்தின் மிதிவெடியில் காலை இழந்த ஒரு ஏழைச் சிறுவன், பள்ளிக்கூடம் செல்லாமல் முடங்கிக் கிடக்கும் நிலை அறிந்தபோது, நரேஸ் துடித்துப் போனான். செயற்கைக்கால் செய்து அனுப்பி வைத்துவிட்டு, பொருத்திக்கொண்டு பையன் படிக்கப் போவதை, மகிழ்வோடு பார்த்துச் சிரித்து நின்றது அந்த உள்ளம்.

நாயகன்!

தமிழல்லாத பெயர்களை மாற்றச் சொன்னபோது, வன்னி மாநிலத்தின் அந்த நாயகனுக்கு, ஆசையோடு நாங்கள் இட்ட பெயர் அதுதான். எவ்வளவு அற்புதமாக அந்தப் பெயர் அவனுக்குப் பொருந்தியிருந்தது.

தாய்பிள்ளை ஆகி இருந்து எங்களை நல்வழிப் படுத்தினானே, தவறிழைக்கும்போதெல்லாம் சின்னக்குழந்தைக்குப்போல பாசத்தைக் கொட்டியல்லவா சொல்லித் திருத்தினான்..... எங்கே போய்விட்டான்?

காலையிலிருந்து இருளும்வரை, உணவு உடையிலிருந்து உறங்கும்வரை எங்கள் ஒவ்வொரு அசைவுகளிலும் கண்ணுக்கு இமையாக இருந்தானே .. ஏன் இப்படித் திடீரென இல்லாமல் போனான்?

தலைவனின் சிந்தனைகளுக்கெல்லாம் செயல் வடிவம் கொடுத்து வென்று, தளபதி தீபனின் தோளுக்குத் தோள் கொடுத்து நின்று, வன்னி மண்ணுக்குப் பெயரையும் புகழையும், பெருமையையும் சேர்த்துத் தந்தானே.... இனி வரவேமாட்டானா?

கறுத்த மேனி. கவர்ந்திழுக்கும் வசீகரம் வட்ட முகத்தில் பளிச்சிடும் சிரிப்பு. உருளும் விழிகளால் கதைபேசி, எங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட அந்த நாயகனை, இனி நாங்கள் பார்க்கவே முடியாதா?

அந்த நாள் - 28. 08. 1993.

நம்ப முடியாமலல்லவா இருந்தது! ....

இடியென மோதி, எங்கள் நெஞ்சங்களைப் பிளந்து சென்ற அந்தச் செய்தி பொய்யாகிப் போகாதா என்று நாங்கள் ஏங்கினோமே.

கிளாலிக்கு எதிரி படையெடுக்கப் போகிறானாம் என்றபோது, விழி சிவந்தல்லவா நின்றான்! '' எங்கள் மக்கள் பாதை வழியே எதிரி வந்து தடுத்து நிற்பதா?'' என்று பொங்கினானே. போருக்குப் புறப்படும்போதுகூட, ''வென்றுவருவேன்'' என்றுதானே சொல்லிவிட்டுச் சென்றான்! ... வெற்றியை தந்துவிட்டு வராமலே போய்விட்டானே ...

யாழ் குடநாட்டின் உயிரிற்கு உயிர் கொடுத்த, யாழ்ப்பாண மக்களின் வாழ்வுக்கு வாழ்வளித்த புலோப்பளைச் சமரில், வன்னி நிலத்தின் அந்தப் போர்த் தளபதி, எங்கள் நரேஸ், வீழ்ந்து போனான்!

எதிரி ஏவிவிட்ட பீரங்கிக் குண்டொன்று எங்களிடமிருந்து அவனைப் பறித்துக் கொள்ளும் அந்தக் கணப்பொழுதை 'ஒளிவீச்சு' எங்களுக்குக் காட்டியது.

நெஞ்சு தவிக்க நாங்கள் பார்த்தோம். தென்றலாக வீசிய அந்தப்புயல் ஓய்ந்து போனது! ○

## விடுதலைப் புலிகளை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலையை ஆட்டிக்கொண்டு இருந்த தமிழகத்துத் தமிழர்கள், தமிழீழ விடுதலைப் போராட்டம் தொடங்கிய பிறகு, இந்தியாவின் பல்வேறு இனங்களில் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற முறையில் தங்களுக்கு இருந்துவர வேண்டிய உரிமைகளைப் பற்றி மறுபரிசீலனை செய்யத் தொடங்கி இருக்கிறார்கள். இங்கே ஆட்சியில் இருப்பவர்கள் ஏற்றாலும் ஏற்காவிட்டாலும் தமிழகத்துத் தமிழர்களின் உரிமைகளைப் பற்றிய மறுபரிசீலனை இயக்கம் ஒன்று மௌனமாக இங்கே நடந்துகொண்டுதான் இருக்கிறது.

ஈழத்தமிழ் விடுதலைப் போராட்டத்தின் மற்றொரு துணை விளைவு இதைவிட மிகப் பெரியது. தமிழகத்துத் தமிழர்கள், தாங்கள் சேர - சோழ - பாண்டியர்களின் வழி வந்தவர்கள் என்று மேடைக்கூச்சல்களை முழக்கிக் கொண்டாலும், தமிழ் இனம் என்கிற ஒரு முதுபெரும் இனம் இருக்கிறது என்னும் உண்மையை இந்திய அளவிலேகூட அவர்களால் பரப்ப முடியவில்லை. தமிழீழ விடுதலைப் போர் தீவிரமடையும் வரை, தமிழகத்துத் தமிழர்கள் இந்தியாவுக்குள்ளே கூட 'தமிழ்' என்னும் தனி இனத்தைச் சேர்ந்தவர்களாக அடையாளம் காணப்பட்டதில்லை! ஆந்திரர்கள் நம்மை 'அரவவாடு' என்றார்கள்; கேரளத்துக் காரர்கள் நம்மைப் 'பாண்டிக்காரர்கள்' என்ற் பெயரிலேயே அறிந்திருந்தார்கள்! வட இந்திய மக்கள் நம்மை 'மதராசிகள்' என்ற பெயரிலேயே அறிந்திருந்தார்கள்! இந்தக்குழப்பங்களை மாற்றி இந்தியாவின் இந்தப் பகுதியில் வாழ்கிற மக்கள் தமிழ் இனத்துத் தமிழர்கள் என்கிற வரலாற்று முத்திரையை மீட்டெடுத்து இன்றைய தமிழர்களுக்கு வழங்கியது தமிழீழ விடுதலைப் போராட்டமே.

இதற்கும் மேலே, கடந்த சில 100 ஆண்டுகளில் தமிழர்களுக்கு ஏற்பட்டுள்ள 'கூலிகள்' என்கிற அசிங்கப் பட்டத்தைக் கிழித்தெறிந்து, தமிழர்கள் 'வீரக் குடிமக்கள்' என்கிற மாண்புசேர் மதிப்பு முத்திரையைத் தமிழர்களுக்கு மீட்டெடுத்துச் சூட்டியதும், ஈழத்தமிழ் விடுதலைப் போராட்டமே!

இந்த உண்மைகளை முன்வைத்துப் பார்க்கிறபோது ஈழத் தமிழ் விடுதலைப் புலிகள் தமிழகத்துத் தமிழர்களாகிய நம்முடைய ஆதரவை விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், ஓடிச் சென்று அவர்களுக்கு உதவியாகக் கை நீட்ட வேண்டியது நம்முடைய கடமை என்றே, ஒவ்வொரு தமிழனும் நினைக்கிறான். அரைகுறைக் குடிமகனாகக் கரைந்துபோன என்னை முழுமைக் குடிமகனாக மாற்றும் முயற்சியில் ஏற்றிய விடுதலைப் புலிகளுக்கு, என் நன்றி உணர்வையாவது நான் காட்ட வேண்டாமா என்று, ஒவ்வொரு தமிழனும் நினைக்கிறான். இருட்டுக்குள் தள்ளப்பட்டுப் போன தமிழ் இனத்தின் கொடியை மீட்டெடுத்து ஏற்றிப் பறக்கவிட்ட ஈழத் தமிழனுக்கு,என் உடலையும்பொருளையும் ஆவியையும் கொடுத்தாலும் !'' என்று, இனஉணர்வு உள்ள ஒவ்வொரு தமிழனும் இரண்டு கண்களும் கலங்குகிறான்........

எனவே, புரிந்துகொள்ள வேண்டும்:-இன உணர்வுக்கு எதிர்க் கொடி நாட்டும் இடக்குத்தனத்தில் இறங்குகிறவர்கள் புரிந்துகொள்ள வேண்டும், தமிழீழ விடுதலைப் போராட்டம் ஒரு தீவின் ஒரு பகுதி அளவாக ஒடுங்காமல், தமிழ் இனத்தின் ஒட்டுமொத்தப் புகழ் ஒளியாகப் பரவுவதால், தமிழகத்துத் தமிழர்கள் அந்தப் போராட்டத்தையும் அதை முன்னெடுத்துச் செல்லும் விடுதலைப் புலிகளையும் ஆதரிப்பார்கள். எந்த நிலையிலும் ஆதரிப்பார்கள். எந்த விலை கொடுத்தும் ஆதரிப்பார்கள். ○

## அன்றும் இன்றும்

ஒலிபெருக்கி பாடுகிறது.

இல்லை, குழந்தையின் குரல் அதன் மூலம் கேட்கிறது-

''மாமா! புலிமாமா!
வரட்டா போராட?'' எனக் குழந்தையின் குரல் கேட்கிறது.

இவளின் அண்ணாமார் போல இன்னும் சில குரல்கள்-

''எதிரிகளின் பாசறையைத் தேடிப் போகிறோம்'' என ஒலிக்கின்றன!

இவை வானொலியில் மட்டுமல்ல. குழந்தைகள் நேரடியாகவும் பாடி மகிழும் பாடல்கள்!

ஆனால் கொஞ்சம் முன்னைய காலத்தில் ?

சினிமாப்பாடல் என்ற பெயரில் 'பச்சைப் படியான' காமுகப்பாடல்களை வாகன ஒலிநாடாக்கள்கூட பரப்பிக் கொண்டிருந்ததே உண்மை!

ஆனால் இன்றோ?

''இந்த மண் எங்களின்......'' என எவரும் தொடக்குமுன் -

''சொந்தமண்!''என எந்தக் குழந்தையும் பாடி முடித்துவிடும் மாற்றம் நிகழ்ந்துள்ளது.

இவ்விதம் எத்தனையெத்தனை மாற்றங்கள்? புதிய ஒளிகள்! விடுதலையின் விடிவுக் கதிர்கள்! தாத்தா தன்னை மறந்து சிந்திக்கிறார்,

(உண்மை நிகழ்வுகளிலிருந்து.) ○

விடுதலைப்புலிகள்

# இதழுக்கு வயது பத்து

# இலட்சிய வாழ்வில் ஒரு துளி

## உரிமைப்போரில் உணர்வுப்புலன் இழந்தும் உள்ளம் தளராத புலிவீரர்கள்

தன் அருகில் வந்து தானியங்கள் கொத்தியுண்ணும் பல்வகைப் புறாக்களின் அழகை ரசித்த வண்ணம் இருக்கிறான். அவை 'தெத்தித் தெத்தி' நடப்பதும், காலைச் சூரிய ஒளி அவற்றின் கழுத்தின் மேற் பகுதியில் பட்டுத் தெறிப்பதால் மேலும் மிளிர்வைக் கொடுப்பதும் அவன் உள்ளத்தைக் கொள்ளைகொண்டிருக்க வேண்டும். ஆயினும் அவனின் ஒளிநிறைந்த விழிகளில் ஏக்கமொன்று தெரிகிறது. தான் அன்புடன் வளர்க்கும் அப்பறவைகளுக்கு தானியம் அள்ளிவீச முயல்கிறான். ஆனால் அவன் வலது கரமோ மனவேகத்திற்கு ஈடுகொடுக்க முடியாமல் நடுங்குகிறது. தனது கையை நோக்கியவன் பெருமூச்சொன்று விடுகிறான். அதனால் அவன் உணர்வுகளின் ஆழத்தை அளக்க முடிகிறது. பெருவிரலுடன் சேர்த்து முதல் மூன்று விரல்களும் சுமாராகத்தான் அசைகின்றன; மற்ற இரண்டும் அதற்கு மறுக்கின்றன. 'எண்டாலும் இரண்டு வருசத்திற்கு முந்தினதிலும் பார்க்க, இப்ப நல்ல முன்னேற்றம்' - தனக்குள் சமாதானம் கூறிக்கொள்கிறான். இவன் பின்னால் திரும்பித் தலையசைக்க, அருகில் நிற்கும் சக போராளியின் உதவியால் இவனிருக்கும் சக்கர நாற்காலி நகரத்தொடங்கிற்று. அப்புறாக்கள் குறுக்கும் நெடுக்குமாகப் பறக்கின்றன. அவன் மனமும் கடந்தகாலத்தை நோக்கிச் சிறகடிக்கின்றது.

அப்பொழுது அவனிற்குப் பதினாறாவது வயது நடக்கிறது. க. பொ. த (சா/த) பரீட்சை எடுப்பதற்கான காலம். எதிர்காலத்தைத் தீர்மானிப்பதற்காக உயர்தரத்தைப் பற்றிச் சிந்திக்கும் காலம். ஆனால் காலம் அவனைக் களத்திற்கு அழைக்கிறது. வன்னிக் காட்டினுள் அவன் வரிப்புலியாகின்றான். பல களங்களில் தொடராய் கால்பதித்ததால் வீரத் தழும்புகளால் உடலை நிறைக்கிறான். நேரடிகள அனுபவங்கள். சண்டைக்கான திட்டங்கள் தீட்டும் திறனால் தன் போர் அறிவைப் பெருக்குகிறான். இப்பொழுது இவனின் குடலில் கணிசமான பகுதி இவனிடம் இல்லை; கீழ்க் காலில் ஏற்பட்ட பலமான காயம் இன்னும் ஆறவில்லை; ஆயினும் அவன்பணி தொடர்கிறது.

**குழாயிலிருந்து நீர் பாயும் ஓசையையும் தாண்டி, அவர்களின் சிரிப்பொலியும் கும்மாளமடிக்கும் சத்தமும் வருகிறது. எப்படி இவர்களால் இந்த நிலையிலும்.... !**

சுமாராக மூன்று மாதம் தான் நேரடியாக வேவு பார்த்து, திட்டம் தயாரித்து, ஒரு குழுவைத் தலைமைதாங்கி, மற்றக் குழுக்களுடன் சேர்ந்து இலக்கு நோக்கி நகர்த்துகிறான். அவன் நினைக்கும் வேகத்திற்கு ஏற்றாற்போல் காலடிகளை எடுத்துவைக்க அவனால் முடியவில்லை. முட்புதர்களையும், மரவேர்களையும், செடிகொடிகளையும் விலத்தி விரைவதற்கு அவன் கால் ஒன்று உதவி செய்ய மறுக்கிறது. ஒவ்வொரு அடி எடுத்துவைக்கும்போதும் உயிர் போகும் வலியின் பிரதிபலிப்பு, நெற்றியில் உருவாகும் நெருக்கக் கோடுகளில் தெரிகின்றது. இவனின் துப்பாக்கியைத் தாங்கியிருக்கும் வலக்கரத்தில் ரவையொன்று எப்பவோ ஊடுருவிச் சென்றதற்கான அடையாளம், எதையோ விபரிக்க முற்படுகிறது.

நடுநிசி, எல்லோரும் நிலையெடுத்து இருக்கிறார்கள். நீண்ட நாட்களாக பல சிரமங்களின் மத்தியில் தீட்டிய தாக்குதல் திட்டத்தின் அறுவடை ஆரம்பமாகப்போகிறது. கணங்கள் எல்லாம் யுகங்களாகக் கழிந்தவண்ணம் உள்ளது. சிறு அரவம்கூட எதிரியை உசாராக்கிவிடும். அந்த மினிமுகாம் தாக்குதலில் இவனுக்கு, சில காவலரண்களைக் கைப்பற்றும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது. கால்கள் தரையைத் தழுவும்போது நெரிபடும் சருகுகளின் சத்தம் கூட அவர்களின் காதுகளுக்கு எட்டாவண்ணம் தான், அம்முகாமிற்கு அண்மையில் நகர்ந்து வந்தார்கள். ஆயினும் ஏனோ களைப்பை உணர்கிறார்கள். மனதை ஒருமுகப்படுத்தல் என்பது கடினமான செயல்தான் போலும்! ஆபத்தினூடே ஓர்மத்துடன் முன்னேறுவதற்கும், அமைதியாக நிதானமாக முன்னேறுவதற்குமிடையே நீண்ட இடைவெளி காணப்படுவதைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஒவ்வொருவரும் தங்கள் இலக்குகளை வெற்றிகொள்வதில் குறியாக இருக்கிறார்கள். அப்பொழுது ஆர். பி. ஜி. கணையொன்று தீ கக்கியவண்ணம் விரைந்து சென்று காவலரண் ஒன்றைத் தகர்க்கிறது. அக்கணத்துடன், துப்பாக்கிகளினதும் ஏனைய கனரக ஆயுதங்களினதும் கோரப்பசிக்குத் தீனி கொடுப்பதில் போராளிகள் தீவிரமாகிறார்கள். எதிரியிடமிருந்து கிடையாகப் பொழியும் ரவை மழையிடையே, வெற்றித் தேவதையை நோக்கிப் புலிவீரர்கள் விரைந்தனர்.

அப்பொழுது, எங்கிருந்தோ வந்த ரவையொன்று இவன் கழுத்தை ஊடுருவிச் செல்கின்றது. கட்டளைகளைப் பிறப்பித்தவண்ணம் வேகமாய் முன்னேறிக்கொண்டிருந்தவன் பின்னோக்கித் தள்ளப்படுகிறான்.

சில நாட்களின் பின் கண்விழித்தவன் தன்னிலை உணர்ந்துகொள்ள முடியாமல் தவிக்கிறான். தான் இப்பூமியில் இல்லாத மாதிரி உணர்கிறான். தனது உடலில் தலை தவிர்ந்த ஏனைய பகுதிகள் இருப்பதையே அவனால் உணர முடியவில்லை. அவனுக்கு தன்னிலை மெல்ல மெல்ல......தெரிய வருகிறது. கண்வழியோடும் கண்ணீர் கன்னம் வழியே பாய்ந்து படுக்கையை நனைக்கிறது.

ஆம்! உறுமித்திரிந்த புலிவீரன் - சுதந்திர மண்ணில் பறக்க விரும்பியவன் - பங்குபற்றிய ஓட்டப் பந்தயங்களிலெல்லாம் முதலாம் ஆளாக வந்தவன் - முதன்முறையாகத் தன் இயலாமையை உணர்கிறான். எத்தனையோ எதிரிகளுக்கு எமலோகத்திற்குவழிகாட்டுவதற்காகத் துப்பாக்கி விசைக்கு விசை வழங்கிய அவன் விரலும் தற்பொழுது, உணர்வில்லாத பகுதியாகிவிட்டது. உடலின் பெரும்பகுதி உணர்விழந்தாலும், செயலிழந்தாலும், மனம் உரமிழக்காமல் இருப்பதற்காக, அதற்குப் படிப்படியாக பயிற்சி கொடுக்க ஆரம்பிக்கிறான்.

நான் எழும்பித்திரிய எவ்வளவு நாள் எடுக்கும்? - இக்கேள்வியை அவன் வெளிப்படையாகக் கேட்பதில்லை; தன்னைத்தானே கேட்பது வழக்கம். இப்பொழுதே இரண்டு வருடங்கள் கடந்து விட்டன. இன்னும்......ஓ.. எவ்வளவு பெரிய தாக்கம்..... அதனால் ஏற்படும் தவிப்பு சொற்களால் சிறையிட முடியாதவை. சகல விடயங்களுக்கும் இன்னொருவரில் தங்கியிருக்க வேண்டிய நிலை. ஆயினும், தாயாகமாறும் போராளிகளால் அவன் வாழ விரும்புகிறான்.

தமிழீழம் ......தமிழீழம்......இதற்காய் இவன் எவ்வளவு வேதனைகளையும் சோதனைகளையும் எத்தனை காலம் வேண்டுமானாலும் தாங்கத் தயார். இந்நாட்டு மக்கள் சுதந்திர மண்ணில் மகிழ்ச்சியாக வாழ்வதைக் காண, தன் கண் இரண்டும் இருந்தால் போதுமென நினைப்பவன். '' தட்டித்தவறி நான் செத்திட்டா என்ர கண்ணை யாராவது ஒரு தமிழ்மகனுக்குத் தானம் செய்யுங்கோ; அதனால நான் தமிழீழத்தைப் பார்ப்பேன்'' - இவனது வாயில் இருந்து வரும் இவ்வார்த்தைகள், உள்ளக் கிடக்கையை வெளிக்காட்டும் வீடியோப் படங்களாகவே தெரிகின்றன.

தலை வேர்க்கிறது. உணர்வு தெரியும் பகுதியெல்லாம் உயிர்போகும் வேதனையால் துடிக்கிறது. அவனுக்குத் தெரிகிறது சிறுநீர் வெளியேறப் போகிறது என்று. அவனது சிறுநீர் வழியூடாக சிறுநீர்ப்பைவரை பொருத்தப்பட்டிருக்கும் இரப்பர் குழாயூடே, சிறுநீரும் இரத்தமும் கலந்து வெளிவருகிறது அதனை அவதானித்த அவன் கண்களில் எதுவித சலனமும் இல்லை. ஏனெனில் சிலகாலமாக இது பழகிய ஒன்றுதான். ஆயினும் ஒரு நாளில் எத்தனை தடவை இவ்வேதனையை அவன் தாங்குவது? ஆயினும் இது தவிர்க்க முடியாததாகவே காணப்படுகிறது. இந்நாட்டில் நரம்பியல் நிபுணர்களின் பற்றாக்குறையும், இத்துறைசார் நிபுணத்துவ பற்றாக்குறையும், இயற்கையாகவே நரம்புக்கலங்களின் பிரிந்து பெருகும் ஆற்றலற்ற நிலையும், அவனின் பாதிக்கப்பட்ட நரம்புமண்டலம் சீராகும் காலத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முடியாமல் செய்கின்றன.


குழாயில் இருந்து நீர் பாயும் ஓசையையும் தாண்டி, அவர்களின் சிரிப்பொலியும் கும்மாளமடிக்கும் சத்தமும் வருகிறது· இப்பொழுது அவன் 'ஸ்ரெச்சரில்' இருந்தபடியே குளித்துக்கொண்டிருக்கிறான்; அருகில் நிற்கும் சகபோராளிகளுடன் அவன் 'பம்பலாய்' சிரித்துக் கதைத்தவண்ணம் குளிக்கிறான்· ''டேய்! எனக்கு இப்ப கை ஏலும்'' எனக் கூறியவண்ணம், தனது இயலாத கையால் தண்ணீர் அள்ளி மற்றவனின் தலையில் வார்க்கிறான். இப்படியே இவர்கள் மாறிமாறித் தண்ணீர் ஊற்றுவதும் பலத்துச் சிரிப்பதும், பார்ப்பதற்கு இதமாக இருக்கிறது. ஆயினும், எப்படி இவனால் இந்நிலையிலும் மனம்விட்டுச் சிரிக்க முடிகிறது எனும் கேள்வி, மனதில் எழத்தான் செய்கிறது. இதற்கான பதில் உலகமே அறிந்த ஒன்றுதான் - உறுதியும் பரிவும் மிக்க எங்கள் தலைவரினால் அவர்கள் வளர்க்கப்படுபவர்கள்!

குளித்து உடைகள் மாற்றிய பின்பு, அவன் முச்சக்கர நாற்காலியில் இருந்தவண்ணம், சக போராளியின் உதவியால் புறாக்கூட்டடிக்கு அழைத்துச்செல்லப்படுகிறான். தனது வலது கரத்தால் மிகவும் கஷ்டப்பட்டு அப்புறாக் கூட்டின் தாழை நீக்கி, கதவுகளைத் திறக்கிறான். உள்ளிருந்த புறாக்கள் சடசடவென தங்கள் இறக்கைகளை அடித்தவண்ணம் வெளிவந்து, முச்சக்கர நாற்காலிக்கருகாமையில் தரையில் அமர்கின்றன. தனது மடியில் மற்றப் போராளி வைத்த பாத்திரத்தில் இருந்து தானியங்களை மெல்ல மெல்ல அள்ளி, அப்புறாக்களுக்காகச் சிந்துகிறான்; அவை அதனைக் கொத்தி உண்ணும் அழகையும் 'தெத்திப் பாயும்' ரம்மியத்தையும் ரசித்தவண்ணம், கண்களைக் கசக்கியபடி சிரிக்கிறான்.

— தூயவன்

### தொகுப்பு நூல்

**தளபதி கிட்டு: ஒரு காலத்தின் பதிவு**



தளபதி கிட்டுவைப்பற்றி தலைவர் அவர்களிடமிருந்தும், சகதோழர்களிடமிருந்தும் கட்டுரைகளாக, உரைகளாக, பாடல்களாக, கவிதைகளாக வெளிப்பாடு கண்ட உணர்வலைகளும், இயக்கத்தின் அதிகாரபூர்வ குரல்களாக வெளியிடப்பட்ட அறிக்கைகளும் கட்டுரைகளும் இந்நூலில் உள்ளடங்கியுள்ளன.

கேணல் கிட்டுவினது தாயகம் நோக்கிய பயணம்பற்றியும், அவர் பிரயாணம் செய்த கப்பலைச் சுற்றி இந்திய அரசு பின்னிய சதி தொடர்பான விபரமான விளக்கங்களையும், இந்த இந்தியச் சதி தொடர்பாக புலிகள் இயக்கம் வெளியிட்ட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிக்கைகளையும் ஒருசேரப் பார்க்கும் வாய்ப்பை இந்நூல் வழங்கியுள்ளது.

இந்தவகையில் கேணல் கிட்டு தொடர்பான ஒரு நல்ல ஆவணமாக இந்நூல் விளங்குகின்றது எனலாம். மனதை ஈர்க்கும் அமைப்புடன் விளங்கும் இந்நூல் ஒன்றின் விலை 60 ரூபா ஆகும்.

# இந்த மாதத்தில் இப்படி வெயில் அடிப்பது ஏன்?

ஆறு ஆண்டுகள் கழிந்து விட்டன.
எட்டிமிதித்துச் செல்லும் காலத்துக்குத்தான்
எத்தனை வேகம்.
பங்குனி மாதத்தில் தார்வீதி தீப்பிடிக்கும்.
வாசல் நுழையும் காற்றுக்கூட வழிதடுமாறும்.
பூபதித் தாயென்ற பொன்மகள்
இந்த மாதத்தில்தான் தேரேறி வீதிக்குவந்தாள்.
சத்தியக்கவசம் நெஞ்சினில் இருந்தது.
தர்மக் காண்டீபம் கையினில் இருந்தது.
நியாயச்சுடர் விழிகளில் ஒளிர
மாமாங்க வீதியில் சங்கு முழங்கினாள்.
அன்னைக்கு எதிரே அந்நியப் படைகள் நின்றன.
'பாரதப் போர்' பதினெட்டு நாட்கள்;
இப்போர் நடந்ததோ முப்பது நாட்கள்.
இது வியாசர் எழுதாத 'குருஷேத்திரப் போர்'
குருந்தமர நிழல் குளிரும்.
எங்கள் தாய்க்கோ எரிந்தது.

## உலைக்களம்

**வியாசன்**

சித்திரை மாதத் தென்றல் இதமளிக்கும்.
அன்னை பூபதிக்கு அது அனலாகியது.
இன்னும் ஆறாத எரிமலைக் குழம்பாய்
எங்கள் நெஞ்சு கனன்று கொண்டிருக்கிறது.
மட்டக்களப்பில் இவள் மடியுறங்கியபோது
உலகத்தின் விழிகள் உறக்கம் கலைந்தன.
பாரதப் படைகள் பயந்தன.
சுட்டுப் பொசுக்காத பட்டினியுத்தம்.
கிட்ட நெருங்க முடியாது வெலவெலத்துப் போனார்கள்.
பூமிப்பந்தின் புருவம் உயர்ந்தது.
பார்வையை எங்கள் பக்கம் திருப்பியது.
நிலவற்ற வானத்தை எவரும் நிமிர்ந்து பார்ப்பதில்லை.
பூக்காத செடிகளை தேனீக்கள் தேடுவதில்லை.
வற்றிய குளத்தில் யாரும் வலைவீசுவதில்லை.
போராடும் தேசங்களே
பூகோளப் படத்தில் பிரகாசிக்கின்றன.
இமய மலையை
எல்லோரும் எட்டிநின்றே பார்த்தனர்.
உச்சியையும் தொட்டு விடலாமென்று
' டென்சிங் ' மட்டுமே உணர்த்தினான்.
நிலவை முகத்துக்கு உவமை சொல்லி
கவிஞர்கள் கண்ணடித்துக் கொண்டிருந்தபோது
' ஆம்ஸ்ரோங்' அதிலே பாதத்தையே பதித்தான்.
பெரிய வல்லரசுடன் போராட முடியுமா?
பலர் முடியாதென்ற முடிவுக்கே வந்தனர்.
பிரபாகரன் மட்டும்
இவர்களை ஊதிக்கலைக்கலாமென்று உணர்ந்திருந்தான்.
இதை வழிமொழிந்தாள்
எங்கள் வரலாற்று நாயகி.
தீக்கு தீமூட்டிய நாட்களென்பதால்தான்
வெளியே
இந்தமாதத்தில் இப்படி வெயில் அடிக்கிறது.
நீண்டகாலமாகத் தமிழன் நித்திரையிற் கிடந்தான்.
உதைத்தகாலுக்கு முத்தமிட்டு உணர்வற்று இருந்தான்.
அடித்தகால்களுக்கு அபிஷேகம் செய்தான்.
பிரபாகரனின் பிறப்புக்குப் பின்னர்தான்
மீண்டும் .....
தமிழனின் நரம்புகளில் குருதி குதித்தது
மீசைகள் முறுக்கேறிக் கொண்டன.
தாவணி சுற்றிய தங்கைகளும்
போரணிக்குள்ளே புகுந்து கொண்டனர்.
பூபதிஅம்மாவின் பிறப்பின் மூலமே இதுதான்.
வெள்ளரசு நிழலில்
சித்தார்த்தனுக்கு ஞானம் சித்தித்தது.
யுத்தத்தின் பின்னர்தான்
அசோகனுக்குப் புத்தியே தெளிந்தது.
விஜேதுங்காவுக்கு மட்டும் விடிவே இல்லையா?
வயதேறவரும் வளர்ச்சி வளையங்கள்
மரங்களின் முதிர்ச்சியைக் காட்டுமாம்.
மனிதனின் வளர்ச்சியை அளக்கமட்டும்
கடவுளேன் கருவியொன்றைப் படைக்கவில்லை?
''புலிகளை அழிப்பேன்.
இப்பிறப்பில் இயலாவிட்டால்
அடுத்த பிறப்பெடுத்தென்றாலும் அழிப்பேன்''
ஐயோ பாவம்.
விஜேதுங்காவுக்கு
அடுத்த பிறப்பிலும் ஆளும் நினைவுதான்.
சிம்மாசன ஆசைதானே பேச்சில் தெரிகிறது.
மூளைவளராத பிள்ளைக்கு அதிகம் பேசவராதே
இவருக்கு எப்படிப் பேசமுடிகிறது.
''எல்லோரும் ஏறி இளைத்த குதிரையில்
சக்கடத்தார் ஏறிச் சறுக்கி விழுந்தாராம்''
இது இங்கே வழக்கிலிருக்கும் முதுமொழி
யாரேனும் மொழி பெயர்த்து விஜேதுங்காவிற்கு முகவரியிடுங்கள்.
தமிழீழம் தலைகுனியாது.
பிரபாகரன் பெருநெருப்பு.
பூபதி என்பவள் போனவள் மட்டும்தானா?
இல்லை.
வந்து பார்.
கருச்சுமந்த பெண்களிலெல்லாம்
பூபதி அம்மாவின் உருவம் தெரியும்.
'நாவலடி'யில் எரிந்தவளுக்கு
'நாவாந்துறை'யில் விளக்கேற்றியுள்ளோம்.
வந்துபாருங்கள்
நாங்கள் ஒன்றாகியுள்ளதை உணர்ந்துகொள்வீர்கள்.
பூபதி அம்மாவுக்கு
ஆடைகட்டிமட்டும் அழகு பார்ப்பவர்களே!
அவளின் கையில் இருந்த
அஸ்திரங்களையும் கணக்கெடுத்துக் கொள்ளுங்கள்.
நெஞ்சுக்குள் எரிந்த நெருப்பை நினைத்துக் கொள்ளுங்கள்.
அச்சமில்லாத அவளின் உறுதியை
உற்றுப் பாருங்கள்.
புலிகள்மீது அவளுக்கிருந்த நம்பிக்கையை
அளவெடுத்துக் கொள்ளுங்கள்.
இப்போது பாருங்கள் -
பூபதிஅம்மா விஸ்வருபமாய் விண்தொட நிற்பாள்!

## தமிழீழத்தின் புள்ளிவிபரத் தரவுகள்

### நூல் மதிப்பீடு



சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகின்ற ஒரு தேசிய இனத்திற்கு இருக்கவேண்டிய பண்புகளில் ஒன்று, அவ் இனத்திற்கென ஒரு தனியான பொருளாதார அமைப்பு இருக்கவேண்டும் என்பதாகும். இத்தீவில் வாழும் தமிழ்த் தேசிய இனம், பாரம்பரியமாகவே தனது பிரதேசங்களில் தனக்கென ஒரு தனித்துவமான பொருளாதார அமைப்பினைக் கட்டியெழுப்பியிருந்தது. ஆனால், 19ஆம் நூற்றாண்டில் பிரித்தானிய ஆட்சியில் எமது பிரதேசங்கள் சிறீலங்காவுடன் இணைக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழீழ தேசியப் பொருளாதாரம் சிதைக்கப்பட்டது. ஆங்கிலேயரின் வெளியேற்றத்தினைத் தொடர்ந்து எம் மண்ணை ஆக்கிரமித்த சிங்கள ஆட்சியாளர்களினால், எமது பொருளாதார அமைப்பு முற்றுமுழுதாக அழிககப்பட்டதுடன், சிறீலங்காவில் தங்கியிருக்கும் பொருளாதாரமாகத் தமிழீழப் பொருளாதாரம் மாற்றியமைக்கப்பட்டது.

இந்நிலையில் இன்று இம்மண்ணில் நடைபெறும் விடுதலைப் போராட்டம், சிங்கள இராணுவத்திற்கெதிரான ஆயுதப் போராட்டமாக மட்டும் அமைந்துவிடாமல் சிங்கள அரசாங்கத்தின் பொருளாதார அடக்குமுறைகளையும் உடைத்தெறியக்கூடிய வகையில், பரந்துபட்ட ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாக உருவெடுத்துள்ளது. எனவே சிதைக்கப்பட்ட எமது தேசியப் பொருளாதாரத்தினை மீளவும் கட்டியெழுப்ப முனையும்போது முதலில் தேவைப்படுவது, எமது மண்ணின் வளங்கள் தொடர்பான தகவல்கள் - தரவுகளாகும். இத் தேவையினை நிறைவுசெய்யக் கூடிய வகையில், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் புள்ளிவிபரக் கிளை, தமிழீழத்தின் புள்ளிவிபரத் தரவுகள் - 1993 என்ற கையேட்டினை வெளியிட்டுள்ளது. எமது மண்ணின் வளங்கள் தொடர்பான அனைத்து விபரங்களையும் ஒரே பார்வையில் அறிந்துகொள்ளக்கூடிய வகையில், தமிழீழத்தின் புள்ளிவிபரத் தரவுகள் தொகுக்கப்பட்டுள்ளமை, இந்நூலின் சிறப்பம்சமாகும். பொருளாதாரத் திட்டமிடலாளர்களுக்கு மட்டுமன்றி, தமிழீழத்தின் பொருளாதார வளங்களை அறிய விரும்பும் அனைவருக்கும் இந்நூல் பெரிதும் பயன்படும். '' நாங்கள் உணவு அனுப்பாவிடில் தமிழீழத்தில் உள்ளவர்கள் மண்ணைத்தான் தின்னவேண்டும் '' என்று சிங்கள பௌத்த பேரினவாதம் கூக்குரல் போடுகின்ற இவ்வேளையில் இந்நூல் வெளிவந்தமை பொருத்தமானதே. இந்நூலை வாசித்து முடிக்கும்போது, சிங்களப் பேரினவாதத்தின் கூக்குரல் எவ்வளவுதூரம் முட்டாள்தனமானது என்ற உணர்வு எல்லோர் மனதிலும் எழுவது தவிர்க்கமுடியாதது. அதுவே இந்நூலின் வெற்றியாகும். '' என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில் '' என்ற பாடல் வரிகளே இந்நூலின் உண்மையான மதிப்புரையாகும். ○


விடுதலைப்புலிகள் இதழுக்கு வயது பத்து

# தென்தமிழீழம் : ஒரு சிறைப்பட்ட வாழ்வு

அவலப்பட்ட ஒரு வாழ்க்கை அந்த மக்களுக்குச் சொந்தமாகி விட்டது.

புலரும் பொழுதிலிருந்து இருளும் வரையும், இருளும் பொழுதிலிருந்து மறுநாள் புலரும் வரையும், மருளும் வாழ்வோடு தென்தமிழீழத்தில் நாட்கள் கடந்து செல்லும். நிம்மதி பறித்தெடுக்கப்பட்ட நிமிடங்கள் அந்த நாட்களைப்போலக் கடந்து செல்லும்.

அந்த மக்களது அன்றாட வாழ்வின் ஒவ்வொரு அலகிலும் எதிரி தனது துப்பாக்கியை நுழைத்து வைத்துள்ளான். அவர்களது தினங்களில், அவர்களது தொழிலில், அவர்களது கல்வியில, அவர்களது பண்பாட்டு வாழ்வில், அவர்களது அன்றாட வாழ்வில், அவர்களில்........ எங்கும் பகைவன் கடிவாளமிட்டுள்ளான். ''அனுமதியின்றி கடவுளும் அசையமுடியாது'' என்பது, அவன் இட்டு வைத்திருக்கும் கட்டளை. மனைக்கு உணவு சமைப்பதிலிருந்து, சேனைக்கு உரம் போடுவது வரை எல்லாவற்றிற்கும் இந்தச் சட்டம் பொருந்தும். சொல்வதைச் செய்யாதவர்கள் சொல்லாமலே கொல்லப்படுவார்கள். இதுதான் தென்தமிழீழச் சட்டம்.



வாழ்வு அலங்கோலமாகிவிட்டது.
காற்றுக்கும் கடலலைக்கும், நிலவுக்கும் சிறை ;
அனுமதியின்றிக் கடவுளும் அசைய முடியாது

அதிகாலை அவலமாய் விடியும். நிசப்தம் எரிச்சலூட்டும் விதமாய் ஆட்சி செய்யும். வாசல் கதவை மெல்லத்திறந்து நீக்கலுக்கூடாய்க் கண்களைச் செலுத்தினால், வேலிக்கு வேலியாகப் பச்சை உடைகள் அணிவகுத்து நிற்கும். கிராமம் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது என்பதை நாம் முடிவு செய்துகொள்ளலாம். அவர்களாக வெளியில் வருமாறு சொல்லும்வரைக்கும், படி தாண்டக் கூடாது. அந்த முழுநாளும், அடுத்த நாளும், அதற்கடுத்த நாளும், சில சமயம் அந்த வாரம் முழுவதுமே அந்தக் கிராமம் சல்லடை போடப்படும். அக்குவேறு ஆணிவேறாக கிண்டிக்கிளறி ஒவ்வொரு குடிசையும் சோதனையிடப்படும். அவர்களின் மனநிலையைப் பொறுத்து சில எரிக்கப்படும். அங்குள்ள பாடசாலையிலோ, கோவிலிலோ ஒன்றுகூடுமாறு ஊர்மக்கள் பணிக்கப்படுவார்கள். ஏற்கெனவே திரட்டப்பட்ட தகவலின்படி தாங்கள் கொண்டுவரும் ஆள் விபரப்பட்டியல் பரிசோதிக்கப்படும். எந்த வீட்டிலாவது எவராவது பட்டியலுக்குக் கூடுதலாக இருந்தால், வந்தவரும் இருந்தவரும் கொண்டுசெல்லப்படுவார்கள். அநேகமானவர்கள் திரும்பி வருவதில்லை. முற்றுகையிடப்பட்டிருக்கும்நாட்களில் ஊர் முற்றாக அங்கவீனமாகிவிடும். தொழிலில்லை, பள்ளிக்கூடங்களில் படிப்பில்லை, கடைகளில்லை, வயல்களில் ஆட்களில்லை, ஆலயங்களில் பூசையில்லை; எல்லாமே வெறிச்சோடிப் போகும். சுருங்கச் சொன்னால்-அநேகமாக அடுப்புகளில் உலை வேகாது, வீட்டு நாய்கூட வீதிக்கு வர அஞ்சும். அப்படியான சுற்றிவளைப்புகள் மாதத்தில் 2 , 3 தடவைகள் அல்லது வாரமொரு தடவை, தென்தமிழீழத்தின ஒவ்வொரு கிராமத்தின்மீதும் நிச்சயமாக நடாத்தப்படும்.

முற்றுகையில் பலவகை. சாதாரண சுற்றிவளைப்பு ஒருவகை. 'தேடுதல்' என்ற பெயரில் இன்னுமொன்று நடக்கும். அது வித்தியாசமானது; மிகக் கோரமானது. அந்த முற்றுகை முடிந்து அவர்கள் வெளியேறுகிறபோது, ஊர் சூறையாடப்பட்டிருக்கும்; எஞ்சியவை கருகிப் போயிருக்கும். ஐந்தோ பத்தோ அல்லது அதனிலும் கூடுதலான ஆட்கள் தெருக்களில் செத்துப் போய்க் கிடப்பார்கள். ஆனால் ஐம்பதோ நூறோ பேர் காணாயல் போயிருப்பர். ஏனையவர்கள் உடுத்த உடையுடன் விரட்டியடிக்கப் பட்டிருப்பார்கள். இந்தவகை முற்றுகை பயங்கரமானது; உயிர்நாடியை உலுக்கக்கூடியது.

ஒரு நாளுக்குத் தேவையான உணவுப் பொருள் மட்டுமே வீட்டிலிருக்கவேண்டும் என்பது, தென்தமிழீழத்தில் நடைமுறையிலுள்ள ஒரு சட்டம். அதோடு, கிராமப்புறங்களில் சிறிய பலசரக்குக் கடைகள்கூட வைத்திருக்கக்கூடாது என்பதையும் அவர்கள் சொல்லிவைத்துள்ளார்கள். அன்றாடம் நகருக்குச் சென்று, அன்றைக்குத் தேவையான உணவுப் பொருளை மட்டும் வாங்கிவர வேண்டும். பகலோ, இரவோ திடீரென வீட்டிற்குள் நுழையும் சிங்களப் படையாட்களுக்குத் தக்கபடி பதில்சொல்லவேண்டும். உணவையும், வீட்டிலுள்ளவர்களையும் சமப்படுத்திக் காட்டவேண்டும். கூடுதலாக இருந்துவிட்டாலோ, ''புலிக்குக் குடுக்கவா?'' என்று கேட்டு என்னவும் செய்துவிட்டுப் போவார்கள். உட்கொண்டு முடிந்தபின் உணவு எஞ்சியிருந்தாலும் சிக்கல்தான். கண்டார்களென்றால் கதையே வேறு; வீட்டோடு கொண்டு போய்விடுவார்கள்.

வீதிக்கு வீதி காவலரண்கள். சந்திக்குச் சந்தி சோதனைச் சாவடிகள். மைலுக்கொரு படைமுகாம்கள். இராணுவக் கெடுபிடிகள் மிக மோசமானவை. மறித்துவைதது்க்கொண்டு அவர்கள் கேட்கும் கேள்விகள்விசர்த்தனமானவையாக இருக்கும. எந்த ஒரு பொருளைக் கொண்டுபோனாலும்-அது சட்டையோ, விளையாட்டுப் பொருளோ, பானையோஎன்னவாகத்தான் இருந்தாலும்-ஏன்? எதற்கு? புலிக்குக் குடுக்கவா? எனவிசாரிப்பார்கள். மூளைக்கும வாயிற்கும் தொடர்பில்லாதவிதமாய் அவர்கள் போடும் கேள்விகளுக்கு. மிகத் தெளிவாகப் பதிலுரைக்க வேண்டும். தளம்பிக்கொண்டு நின்றால் தள்ளிக்கொண்டு போய்விடுவார்கள். சோதனை முகாமிற்கு 300 யார் முன்னதாகவே ஊர்திகளிலிருந்து இறங்கவேண்டும். நடந்து போய், சோதனை முடிந்து திரும்பவும் 300 யார் நடந்துதான் ஊர்திகளில் ஏறவேண்டும். கல்முனையைச் சேர்ந்த ஒரு வர்த்தகர், ''முன்னையெல்லாம் மட்டக்களப்பிலிருந்து வர ஒன்றரை மணி நேரம் போதும். இப்பெல்லாம், நாலு அஞ்சு மணி பிடிக்கிறது. 15 மைல் தூரம் போறதெண்டா, அதில் இவனுகளின்ர காம்புகளுக்கு முன்னால நடக்கிற தூரம் அஞ்சு மைல் வரும்'' என்று சினந்துகொண்டார்.

ஒவ்வொரு காலையிலும், ஒவ்வொரு குடிமகனும் அருகிலுள்ள குறிப்பிட்டஒரு படைமுகாமில் சென்று, தங்கள் இருப்பைப் பதிவுசெய்ய வேண்டும். ஊருக்கு வெளியில் எங்கு செல்வதென்றாலும் படை முகாமில் முன்அனுமதி பெறவேண்டும். அப்படியாக அனுமதி பெறப் போகின்றவர்களிடம் எங்கே போகிறார்கள்? ஏன் போகிறார்கள்? எவரிடம் போகிறார்கள்? எப்போது வருவார்கள்? என்பதையெல்லாம் துருவித் துருவி விசாரிப்பார்கள். பதில்கள் படையினருக்குத் திருப்தியளித்தால் மட்டுமே அனுமதி கிடைக்கும். வடக்குக்குச் செல்வதுபற்றி எவரும் மூச்சுவிடக்கூட முடியாது; 'வடக்கு' அவர்களுக்கு 'ஒவ்வாமை' ஆனது.

விதைக்கப்பட்ட வயல்நிலம் செழித்து வளரும்போது, அதற்கு உரம்போடுவதைப் பற்றி பருவ காலங்கள் தீர்மானிப்பதில்லை; படையினர்தான் தீர்மானிப்பார்கள். காலம் வந்ததோ இல்லையோ, வயல் வளர்ந்ததோ இல்லையோ, படையினர் அனுமதிக்கும்போதுதான் உரம்போட முடியும். அதே போல், வரப்புயர வளர்ந்து அசைந்தாடும் கதிர்மணிகளை அறுவடை செய்வது பற்றி, நெற்கதிர்களின் முதிர்ச்சிநிலை தீர்மானிப்பதில்லை. சிங்களப் படையினரின் வசதியைப் பொறுத்துத்தான் அதுதீர்மானிக்கப்படும். அவர்கள் சொல்லும் நாளில்தான் அறுவடை செய்யவேண்டும். ஏனெனில் அப்போதுதான், அரிந்து குவித்து சூடடித்து தமிழர்கள் நெல்லை மூட்டைகட்டி வைக்கும்போது, சிங்களவர்களையும் முஸ்லிம்களையும் அனுப்பி எடுப்பிக்க முடியும்.

பொதுவாக - உலகெங்கும்-சந்தைகளில் - அது என்ன வகைப்பட்டதாய் இருந்தாலும் - பொருட்களை விற்பவன்தான் அவற்றுக்கு விலை சொல்லுவான். ஆனால், தென்தமிழீழத்துச் சந்தைகளில் அது தலைகரணமாகத்தான் நடக்கும். வாங்குபவனே விலையை முடிவு செய்வான்; ஏனெனில் விற்பவன் தமிழன். அயல் கிராமங்களில் இருந்து பொருட்களை வாங்குகின்றவன் முஸ்லிம் அல்லது சிங்களவன். தமிழன் பொருளுக்குப் பேரம் பேசினால் அவர் அடுத்தநாள் இருக்கமுடியாது; காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டுப் பின்னர் காணாமல் போய்விடுவார். எனவே, சொல்லும் விலைக்குப் பொருளைக் கொடுத்துவிட்டு, தருகின்ற பணத்தை வாங்கிக் கொண்டு போகவேண்டியதுதான்.

சத்துருக்கொண்டான் கிராமத்தைச் சேர்ந்த-தற்போது அங்கிருந்து இடம்பெயர்ந்துள்ள-பாடசாலை ஆசிரியை ஒருவர் சொன்ன கருத்து பின்வருமாறு -

அநேகமான விடிகாலைகளில் முழுவியளம் மனிதப் பிணங்களின் மீதாகத்தான் இருக்கும். நினைவில் வைத்துக்கொள்ள முடியாமல் மறந்துவிடக்கூடிய அளவுக்கு கொலைகள் நடந்துள்ளன. ஒவ்வொரு மூச்சு விடும்போதும் படையினருக்கு விளக்கமளிக்க வேண்டும். இதுதான் சாட்டு என வைத்துக்கொண்டு, தேசத்துரோகக் கும்பல்களைச் சேர்ந்தவர்களும், தங்களது சொந்த - குடும்பப் பிரச்சினைகளுக்குப் பழிதீர்த்துவிடுவார்கள். சில சமயங்களில், ''ஏனடா இங்கு வந்து பிறந்தோம், யாழ்ப்பாணப் பக்கம் ஓடிவிட்டாலும் நல்லது" என்றிருக்கும் என்றவாறு அவர் தனது உணர்வலைகளை வெளியிட்டார்.

சிங்கள அரசு நடாத்தும் இராணுவ ஆட்சியின்கீழ் கோரமாக நசுங்கிப்போயிருக்கும் தமிழீழததின் தென்பிராந்தியத்தில், உண்மையில் ' உயிர்வாழ முடியாது ' என்பதே தமிழர்களுக்குள்ள பெரிய பிரச்சினை எனலாம் ஆனால், ' உயிர்வாழ்வதுவோ ' அதைவிடப் பெரிய பிரச்சினையாக உள்ளது. அன்றாட வாழ்வு முழுமையாக அலங்கோலப்பட்டுப் போயுள்ளது. எந்த நேரமும் பயங்கரம் - எந்த வேளையும் எதுவும் நடக்கலாம். சிங்களத் துப்பாக்கிகளின் உத்தரவின்கீழ்தான் இந்த மண்ணில் எதுவும் இயங்கலாம் - படுவான்கரைக் காற்று, எழுவான் கரைச் சூரியன், நிந்தாவூர்க் கடலலை, எல்லாவற்றுக்கும் சிறைதான்.

மாங்கேணிப் பகுதியைச் சேர்ந்த ஒரு ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர் சொன்னார்:

''தன்னோட இனிமேல் தமிழர்கள் சேர்ந்து வாழமுடியாது என்பதைத்தான் சிங்களவன் எங்களுக்கு உணர்த்துகிறான். அங்கிருந்து யாழ்ப்பாணத்துக்கு வரும்போது, சிறை உடைத்து வருவது போன்று ஒரு உணர்வு ஏற்படுகின்றது.'' ○

விடுதலைப்புலிகள் இதழுக்கு வயது பத்து

# மண் போதும்!

"மண்ணைத் திட்டாதே! மண்ணை அவமதியாதே!'

- இது மனித வரலாறு புகட்டும் கோட்பாடு.

இதை விளங்காதோர் உயர் பதவியில் இருந்தால், அவர் சிறிலங்கா ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா பேசியதைப் போலத்தான் கூறிக்கொண்டிருப்பார்!

''வடபகுதி மக்கள் மண்ணைத் தின்று சாகவேண்டியதுதான்'' என்பது, அவரது பொதுக்கூட்டப் பேச்சு.

''வடக்கு மாகாணம் எதுவும் இல்லாத வரண்ட மாகாணம். நாங்கள் அவர்களுக்கு உணவு, உடுப்பு, படிப்பு, சம்பளம், ஓய்வூதியம் கொடுப்பதை நிறுத்திவிட்டால் அவர்கள் மண்ணைத் தின்று சாகவேண்டியதுதான்''


அந்த அதி உத்தமர் கொடுத்து வரும் உச்சக் குரல் இது!

மதியீனர் விசிய வார்த்தைகளும் உலவவே செய்கின்றன!

மண்ணைப் பழிக்கும் இக்கூற்றினை - விளங்காமையை - கேட்டு தமிழீழ ஆற்றல் உறுமி எழுகிறது!

''வடக்கு எதுவுமில்லாத வரண்ட மாகாணமா? இல்லை! நாங்கள் இருக்கிறோம் - நெற்களஞ்சியமாய்'' எனப் பகிரங்க விடை கொடுக்கின்றன, மன்னார் மாதோட்டமும் வன்னி மாநிலமும் பூநகரிப் பிரதேசமும்!

''என்ன வளம் இல்லை?'' எனக் கேட்கிறது குடாநாடு. இம்மண் உலகிற் சுவைமிக்க மா, பலா, வாழைகளையும்; பசுமையின் வடிவமாய்ப் பரந்து நிற்கும் மரக்கறித் தோட்டங்களையும், உப உணவு உற்பத்திகளையும் தன்னகத்தே கொண்டது. இவற்றைக்




கொழும்புக்கு ஏற்றிய லொறிகள் எத்தனை எத்தனை!

தென்னையுடன் இலட்சக்கணக்கான பனை மரங்கள்!

நெல்லுடன் குரக்கனும் கிழங்கு வகைகளும் உழுந்தும் பயறும் ஏனைய சிறுதானியங்களும்!

சுற்றிச் சூழ உள்ள கடல் வளம் கொஞ்சமா?

வன்னியின் வன வளம்......

''என்ன வளம் இல்லை?'' எனத் தமிழீழத்தில் விளையும் உப்பும் தன் உரிமைக் குரல்கொண்டு கேட்கும்!

கண்ணாடித்தொழிற்சாலைக்கு வேண்டிய பரந்த கடற் கருமண், பருத்தித்துறையிலிருந்து தென் கரையோரம் எங்கும்! திருமலை - புல்மோட்டைப் பகுதியிலோ கோடிக் கணக்கில் வழங்கவல்ல இல்மனைட் மணல்தரை! வடக்கில மீண்டும் கட்டி எழுப்பப்படவேண்டிய சிமெந்துத் தொழிற்சாலை!

பாரிய திருமலைத் துறைமுகம், ஊர்காவற்றுறை, காங்கேசன் துறை, பருத்தித்துறை எனும் துறைமுகங்கள்!

''என்ன வளம் இல்லை? என்ன தொழில் இல்லை?'' என்ற ஆர்ப்பரிப்பே உரிமை மூச்சாக இங்கு விழுகிறது!

வடபகுதி மட்டுமல்ல, தென் தமிழீழமும் தமிழர்களுடையதே; ஈழத்தமிழரின் பரம்பரைப் பூமியே! இதன் வளங்கள் ...?

சிங்கள அரசின் இராணுவத் திணிப்புடன் எழும் குடியேற்றச் சதிகள் - இவை நெடுநாள் நின்று நிலைத்திடப்போவதில்லை! இது இம்மண்ணின் மக்கள் கூறும் சாட்சி!

சிங்களப் பகுதியில் சிங்கள அரசர்கள் ஆண்டார்களாம், மறுக்கவில்லை! அதுபோல தமிழ் மண்ணில், தமிழ் மன்னர்கள் ஆண்டதே வரலாறு!

தளராத படிப்பு, அயராத ஊக்கம் - இந்த உடைமைகள் பிறர் எமக்குத் தந்தவை அல்ல! அத்துடன் இன்று விடுதலைப் போராட்ட ஈகத்திலே, உலகம் வியக்க இளம் தளிர்கள் நிற்பது எதற்கு? விழலுக்கு இறைக்க அல்ல.

நாங்கள் புதிதாகப் பிரிவினை கேட்கவில்லை. நாம் ஆண்ட இனம்; மீண்டும் ஆளத் துணிந்து விட்டோம்;

எம் மண்ணைத் 'தின்ன' - குண்டுகளால் அழிக்க - அத்துமீறிய குடியேற்றங்களால் பறிக்க - முனைவது வேறெவரும் அல்ல; சிங்கள அரசாங்கமே!

இதை அவர்கள் உணர்ந்தால் போதும்!

எமக்கு எம் மண் போதும்!

-நாக. பத்மநாதன் ○

# 'ஐலன்ட்' பத்திரிகையும் ஒரு சிங்களப் பிரமுகரும்

மண்கிண்டிமலை முகாம் தகர்க்கப்பட்ட பின், சிங்கள இனத்திற்குப் போர்வெறி ஊட்டும் விதமாக, ''ஐலன்ட்'' பத்திரிகை ஒரு ஆசிரியர் தலையங்கத்தை வரைந்திருந்தது. ''விழித்தெழுங்கள்!'' என்ற தலைப்பில் அது எழுதப்பட்டிருந்தது. இதற்குப் பதிலளிக்குமுகமாக வெளிநாட்டில் வதியும் ஒரு சிங்களப் புத்திஜீவி வரைந்த பதில் மடலை, 'தமிழ்நேசன்' இதழ் பிரசுரித்திருந்தது. அம்மடலின் முக்கிய பகுதிகளை இங்கு தருகின்றோம்.

அன்புள்ள ஆசிரியருக்கு!

'விழித்தெழுங்கள்' ( Wake up ) என வெளிவந்த தங்களது 1.8.93 ஆம் திகதிய ஆசிரிய தலையங்கத்தைப் படிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த வரிகள் ஒன்றை மிகத் தெளிவுபடுத்தி நிற்கின்றன. அதாவது, 'ஜனகபுர' முதலிய போர் முனைகளில் அரசு அடைந்துள்ள படுதோல்விகள், தங்களுக்கு ஒரு திகைப்புடன்கூடிய வேதனையைத் தந்துள்ளன என்பதாகும். இது எவ்வளவோ படையணி, பொருள், யுத்த தளபாடங்களின் துணைகொண்டு வட பகுதியின் ''பயங்கரவாதத்தை'' ஒழிக்க, கடந்த பத்து வருடகாலமாக எடுக்கப்பட்டு வரும் யுத்த முயற்சிதந்துள்ள தோல்வி என்பது சிறு விடயமல்ல.

எனவே இது வேதனைக்குரிய - ஆய்வுக்கும் உரிய - விடயமேயாகும். இதன் அடிப்படையிலுள்ள உண்மைகளை இங்கு ஆய்ந்திடுவோமா?

எமது எதிரி தனது இயல்பாலும் அடிப்படை நோக்காலும் எத்தன்மையவனாய் இருக்கிறான்? அதாவது அந்த ''வடபகுதிப் பயங்கரவாதி'' ஒரு கொள்ளைக் கோஷ்டியினனா? கடத்தல், களவு, கொலை, சூறையாடல்களைக் கைக்கொண்டு நிற்கும் ஒரு தனிக்குழுவின் அல்லது தலைமறைவுக் குழுவின் வடிவமா? இன்னும் சொல்லின், இவன் ஒரு ''மா:பியா'' போன்ற பயங்கரப் பிரிவினனா? அல்லது - தனது தேசிய இனத்திற்காகத் தனிநாடு கோரி நிற்கும் (கெரில்லா) ஆயுதப் போராளியா?

அது முன்னைய வகையிலானது எனில், அது அரசினால் எடுக்கப்பட்ட பெரும் செலவிலான நடவடிக்கைமூலம் இதுவரை அழிந்து முடிந்திருக்க வேண்டும்.

இவ்விதமில்லாது நாம் எதிர்கொண்டிருப்பது, தனது இனத்திற்குத் தனிநாடு காண எழுந்துள்ள ஒரு(கெரில்லா) ஆயுதப் போராட்ட சக்தியையே எனில், அதற்கு நாம் செலவிடும் பணம், படையணி, போர்த் தளபாடங்களின் அளவு பற்றி நாம் இன்னும் அனுமானிக்கவில்லை என்பது தெளிவாகிறது!

இதில் நிதி ஒதுக்கீட்டை முதலிற் கவனிப்போம். 1993 ஆம் ஆண்டு முற்பகுதியில் எங்கள் முன்னைய ஜனாதிபதியவர்கள், 2, 300 கோடி ரூபா யுத்த செலவினங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். இதுபோன்ற ஒரு நடவடிக்கைக்காக, ஐரிஷ் புரட்சி இராணுவத்திற்கு எதிராக ( I.R.A.) பிரிட்டிஷ் அரசாங்கம், ஏறக்குறைய 23, 000 கோடி ரூபா பெறுமதியான தொகையைச் செலவிட்டுள்ளது. நிலப்பரப்பில் வட அயர்லாந்து இலங்கையின் வடக்குக்கிழக்கு மாகாணங்களின் மூன்றிலிரண்டு பகுதியே ஆகும்; போராளிகளின் தொகையும் அங்கு மிகக் குறைவு. இதை ஒப்பு நோக்கும்போது, எங்கள் ஒதுக்கீடு சராசரி பத்தில் ஒன்றளவு சிறிதாக இருப்பதைக் காணலாம்.

அரச படையினரின் எண்ணிக்கையைப் பார்க்கும்போதும் இங்கு சுமார் 8, 000 புலிப்படையினருக்கு எதிராக உள்ள அரச படையினரின் தொகை 80, 000 என்ற அளவிலேயே உள்ளது. இது ஒரு புலிப் போராளிக்கு எதிராக பத்துப் படைவீரர் என்ற வகையில் உள்ளது. ஆனால் பிரிட்டிஷ் படை விபரப்படி, ஒரு ஐரிஸ் புரட்சி வீரனுக்கு எதிராக 110 அரச படையினர் அங்கு வைக்கப்படுகின்றனராம்.

பயிற்சித் திறனிலும் வட அயர்லாந்திலுள்ள ஆங்கிலத் துருப்புக்கள் போர்க்லாந்து, வளைகுடா யுத்த அனுபவத்தில் தேறியவர்களாகவே காணப்படுகிறார்கள். ஒப்புநோக்கும்போது எம் சிறிலங்கா இராணுவமோ சமீபத்தில் உருவாக்கப்பட்டது; பயிற்சிகளிற் குறைந்தது; அத்துடன் கடல்கடந்த அனுபவத்தை இனிமேற்தான் பெற வேண்டியுள்ளது. இவ்வகைத் திறனோடு ஒரு புலிப் போராளிக்கு எதிராக பத்துப் படைவீரர் மட்டும் நின்றுகொண்டு அபார சாதனையைச் செய்து விடுவர் என எண்ணுவது, எமது புத்தியின் பேதலிப்பைக் காட்டுவதாகவே இருக்கும்!

நிதி ரீதியிலான வரவு செலவுகளைப் பொறுத்த அளவில், விடுதலைப் புலிகளுக்குள்ளது போர்ச் செலவு மட்டும் எனலாம். ஆனால் சிறிலங்கா அரசைப் பொறுத்த அளவில், பெரும் தொகையை விழுங்கும் சிவில் நிர்வாகத்தையும் ஏற்றுக்கொண்டுதான், அது யுத்தத்திற்கு வேண்டிய செலவினங்களையும் சுமந்து செல்லவேண்டியுள்ளது. இவற்றைத் தூக்கும் அரசியற் கரங்கள் தம் சொந்த நலன்களையும், எதிர்த்துப் போட்டியிடும் அரசியற் கோணங்களிலிருந்து தம்மைக் காத்துத் தப்பவைக்கும் அன்றாட உத்திகளையும் கையாண்டுகொண்டே நகர வேண்டியிருப்பது, மேலும் ஒரு பேருண்மையாகும்.

யுத்தங்கள் அழிவையும் நலிவையும் தருவது இயல்பு. இங்கிலாந்து அங்கு நடாத்தும் ஐரிஷ் புரட்சி இயக்கத்தினருக்கு எதிரான நடவடிக்கையில் கடந்த 25 வருடகாலமாக கண்டுள்ளது, ஏனைய அயல் நாடுகளுடன் ஒப்பிடும்போது, பின்னடைவையே ஆகும்.

உண்மை இதுதான். தனது தேசிய இனத்திற்காக தனிநாடு கோரி எழுந்த எந்த ( கெரில்லா ) ஆயுதப் போராட்ட சக்தியும், அவ்வித தனிநாட்டை அடையாது மடிந்ததில்லை. இது வரலாற்று உண்மை.

அன்புள்ள ஆசிரியரே,

மேற்சொன்ன உண்மைச் சம்பவங்களையிட்டுத்தான் சிங்கள மக்களும் அரசாங்கமும் 'விழித்தெழ வேண்டும்'

இப்படிக்கு
பூரண விழிப்படைந்திருக்கும்,
அட்றியன் விஜயமானே. ○

விடுதலைப்புலிகள் இதழுக்கு வயது பத்து

# புலிகளின் சமாதான சமிக்கைகளுக்கு சிங்கள அரசின் பதில் சமிக்கை என்ன?

## முப்படைகளையும் தயார்ப்படுத்தி போருக்குச் செய்யப்படும் ஏற்பாடுகள்



ஒன்றன்பின் ஒன்றாகவும் இடைவிடாதும் சமாதானத்திற்கான தமது விருப்பைப் புலிகள் இயக்கம் வெளிப்படுத்திவருகின்றது. சிங்கள அரசைச் சமாதானத்தின்பால் அக்கறை கொள்ளவைக்கும் நோக்குடன் போர்க்கைதிகளை விடுதலை செய்வதும், அனைத்து நல்லெண்ணக் குழுக்களை வாஞ்சையுடன் வரவேற்பதுமாக, புலிகளின் தலைமை சமாதானத்திற்காகப் பெருமுயற்சி செய்கிறது, சமாதான சூழலை ஏற்படுத்த முயலும் வெளிநாட்டு அரசுகளின் விருப்பங்களுக்குப் பெருமதிப்புக்கொடுத்து, அவர்களைத் தமிழீழம் வரும்படி புலிகளின் தலைமை அழைப்புகள் விடுத்துள்ளது. அத்துடன் சமாதான முயற்சிகளுக்குப் பங்கமேற்படாதவகையில் புலிகள் இயக்கம் அவதானமாகவும் நடந்துகொள்கின்றது.

''சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கின்றது'' என, 'அனைத்துலக மகளிர் நாளை' முன்னிட்டு விடுத்த செய்தியில் (08. 03. 1994), தலைவர் பிரபாகரன் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். தலைவரின் நன்முயற்சியை சிங்கள அரசு கருத்திலெடுக்காதுவிட்டாலும், அவர் தனது நிலைப்பாட்டை மீண்டும்மீண்டும் வலியுறுத்தி வருகின்றார்.

புலிகளின் இந்த அரசியல் நிலைப்பாட்டுக்கு சிறீலங்கா அரசு எப்படிப் பதிலளிக்கின்றது?

யாழ்ப்பாணம் வந்து திரும்பும் நல்லெண்ணக் குழுக்களின் முயற்சிகளுக்கு அரசு எவ்வித ஊக்கமும் கொடுக்காதுவிடுகின்றது. அதேவேளை, சமாதான நல்லெண்ண முயற்சியில் ஈடுபடுபவர்களுக்கு - குறிப்பாக கிறிஸ்தவக் குழுக்களுக்கு - சிங்களப் பேரினவாதிகளிடமிருந்து கண்டனங்களும், மிரட்டல்களுமே பதிலாகப் போய்ச்சேருகின்றன.

அத்துடன், கனடா மற்றும் சுவீடனிலிருந்து வரும் சமாதான முன் முயற்சிகளை '' தலையீடு '' என்று முத்திரைகுத்தி, சிங்கள அரசு தட்டிக்கழிக்கின்றது.

அண்மைக்காலமாக சமாதானத்திற்கான முன்முயற்சிகளில் புலிகள் இயக்கம் ஆக்கபூர்வமாக ஈடுபட்டுள்ளதை, சர்வதேச சமூகம் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளது. சமாதானத்திற்கான புலிகளின் முன்முயற்சிகளுக்கு அரசு தகுந்த முறையில் பதிலளிக்காது விடுவதாக, பல வெளிநாட்டு அரசியலாளர்கள் பகிரங்கமாகவே கூறியுள்ளனர். சிங்கள அரசுக்கும் இக் குற்றச்சாட்டைப்பற்றி நன்கு தெரியும்.

இதன் காரணமாக, தானும் சில நல்லெண்ணச் சைகைகள் விடுப்பதாகக் காட்டி உலகை ஏமாற்றச் சிறீலங்கா அரசு முயல்கின்றது.

போர்க்கைதிகளை விடுவிக்கும் புலிகளின் நல்லெண்ணச் சைகைகளுக்குப் பதிலாகத் தனது சிறையிலுள்ள '' புலிகளை '' விடுதலை செய்துள்ளதாக சிங்கள அரசு பிரச்சாரம செய்கின்றது. இது ஒரு பொய்ப் பிரச்சாரம் ஆகும்.

தமிழர்கள் என்ற ''குற்றத்தைத்'' தவிர வேறு எந்தவித காரணமுமில்லாமல் கைது செய்யப்படும் அப்பாவித் தமிழர்களை விடுவித்துவிட்டு, புலிகள் உறுப்பினர்களை விடுதலை செய்துள்ளதாக அறிவித்து உலகை ஏமாற்ற, அரசு முனைகின்றது.

இதேபோன்றுதான் மீன்பிடிக்கெதிரான கடலடங்கு சட்டத்தை நீக்கி விட்டதாகக் கொழும்பில் அறிவித்துவிட்டு, குடாநாட்டின் கரையோரங்களில் மீன் பிடிக்கும் மீனவர்கள்மீது சிங்களக் கடற்படை பீரங்கி மற்றும் உலங்கு வானூர்தித் தாக்குதல்களை நடாத்தித் தமிழ் மீனவர்களைக் கொன்று வருகின்றது.

கடலடங்கு சட்டம் நீக்கப்பட்டதாக அரசு அறிவித்த பின்னர் சிங்களக் கடற்படை! நடாத்திய 05 வெவ்வேறான தாக்குதல்களில் 10 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் அதே அளவானோர் காயமடைந்துள்ளனர்.

கடலடங்கு சட்டத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மீனவர்களுக்குக் கொடுத்து வந்தநிவாரணப் பொருட்களை நிறுத்துவதற்காக அரசு செய்த சூழ்ச்சிதான் '' தடைச்சட்டம் நீக்கப்பட்டதான'' அறிவிப்பு. இந்தச் சூழ்ச்சிகரத் திட்டத்தை உணராத அப்பாவி மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்று, சிங்களக் கடலரக்கனின் வலையில் சிக்குகின்றனர்.

இதேபோல கண்மூடித்தனமாக எறிகணை வீசி - வான் தாக்குதல்களைச் செய்து - அப்பாவித் தமிழர்களைக் கொன்றுவருகின்றனர்.

இதேவேளை, இனப்பிரச்சினைக்கான தீர்வுக்குரிய அடிப்படைகளில் மிகமுக்கிய இடத்தை வகிக்கும் 'தமிழர் தாயகக் கோட்பாட்டை' ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, அதைப் பிரித்துச் சிதைப்பதிலேயே சிறீலங்கா அரசு கண்ணுங்கருத்துமாக இருக்கின்றது. சர்வஜன வாக்கெடுப்பு என்று கூறிக்கொண்டு கிழக்கு மாகாணத்தைப் பிரித்தெடுத்துச் சிங்களமயமாக்குவதிலேயே, அரசு குறியாக இருக்கின்றது.

இது, இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளை நிரந்தரமாகவே நிறுத்திவிடும் நோக்குடன் சிங்கள அரசு செய்யும், ஒரு அபாயகரமான நடவடிக்கை என்றே சொல்லவேண்டும்.

''இனப்பிரச்சினை இல்லை'' என்று ஜனாதிபதி திரும்பத் திரும்ப வலியுறுத்துவதும், தமிழரின் தாயக நிலத்தைப் பிரிக்க முயல்வதும், சமாதான நல்லெண்ணக் குழுக்களை அசட்டை செய்வதும், வெளிநாடுகளிலிருந்து வரும் சமாதான முயற்சிகளைத் தடுத்து நிறுத்துவதுமாக, சிறீலங்கா அரசு சமாதான முயற்சிகளுக்கு வெளிப்படையாகவே முழு எதிர்ப்பைக் காட்டுகின்றது.

மறுபுறத்தில், தமிழரின் இனப்பிரச்சினையை இராணுவ பலம் கொண்டு தீர்த்துவிடுவதில் அரசு உறுதியாக இருக்கின்றது. அதற்கு வசதியாக, போர்த் தேவைகளுக்கென வரவு செலவுத் திட்டத்தில் எத்தனை வீதத்தையும் ஒதுக்கத் தான் தயாராக இருப்பதாக, திரு. டி. பி. விஜேதுங்கா போர்வெறியுடன் அண்மையில் கூறியுள்ளார்.

''போர் சிங்கள இளைஞர்களது உயிர்களைக் காவுகொள்கிறது'' என்ற அவலக் குரல்கள், சிங்கள தேசத்தின் ஒரு மூலையிலிருந்து எழுந்துகொண்டிருந்தாலும், அதை அமுக்கிவிடுவதுபோலப் பலத்த சத்தத்துடன் சிங்களப் பேரினவாதிகளும் - ஆளும் வர்க்கமும் போர்க் குரலை ஓங்கி ஒலித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

புலிகள் இயக்கத்தின் சமாதான விருப்பையும் அதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளையும், அத்துடன் சிங்கள அரசின் போர் வெறியையும் அதற்கான தயாரிப்பு வேலைகளையும், உலகம் அவதானித்தபடிதான் உள்ளது.

இந்த நிலையில், சமாதானத்திற்காகக் குரல் கொடுக்கும் மேற்குலகம், சமாதானத்துக்கு வரமறுத்து இன அழிப்புப் போரில் ஈடுபட விரும்பும் சிங்கள அரசுக்கு ஆயுதங்களையும் மற்றும் உதவிகளையும் கொடுப்பது அல்லது கொடுப்பதை அனுமதிப்பது, எந்த வகையிலும் நீதியாகாது!

எனவே, சமாதானத்தை விரும்பும் சர்வதேச சமூகமானது, சிங்கள அரசைச் சமாதான வழிமுறைக்குக் கொண்டுவரவேண்டும்; அது முடியாவிட்டால், வெறிபிடித்த சிங்களப் படைகளிடமிருந்து தமிழினத்தைப் பாதுகாப்பதற்காக, புலிகள் இயக்கத்திற்கு உதவவேண்டும்! ○

### சமரசத்தை நோக்கி...

“நாம் சமாதானத்தின் கதவுகளை அடைத்துவிடவில்லை. சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் பாதைகளை மூடிவிடவில்லை. சமாதான வழிமூலம் எமது மக்களிற்கு நீதி கிடைக்குமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

சமாதானத்தைத் தோற்றுவிக்கும் நல்லெண்ண நோக்குடன் இங்குவரும் சமாதானத் தூதுவர்களை நாம் நேசக்கரம் நீட்டி வரவேற்று வருகிறோம். போரை நிறுத்தி, சமாதான வழியில் பிரச்சினைக்குத் தீர்வுகாண எமது விடுதலை இயக்கம் தயாராக இருக்கிறது என்பதை, நாம் இவர்களுக்கு மேலும் மேலும் வலியுறுத்தி வருகிறோம் எமது நல்லெண்ணத்துக்குச் சான்றாக சமாதான சமிக்கைகளைக் காட்டவும் நாம் தவறவில்லை.

எமது நோக்கத்தையும், நிலைப்பாட்டையும் சர்வதேச சமூகம் இன்று நன்கறியும் சமாதானத்தின் பாதைக்கு முட்டுக்கட்டையாக நிற்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும். உலகத்தின் சமாதான முயற்சிகளுக்கு ஊறு விளைவிப்பவர்கள் யார் என்பதையும் உலகம் நன்கறியும்.

மனித உரிமைக்கும், மனித நீதிக்கும், சமாதானத்திற்கும் குரலெழுப்பும் இந்த உலகமானது, உரிமை கேட்டு, நீதி கேட்டு, சமாதான வழியில் தீர்வு கேட்டு நிற்கும் எமது மக்களிற்குச் சார்பாகக் குரலெழுப்ப வேண்டும். இதுவே உலகத்தின் இன்றைய தார்மீகக் கடப்பாடாகும்.”

- தலைவர்
08.03.1994